

கலா சிந்தாமணி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" —திருக்குறள்.

புத்தகம்-௬ 6

ரௌத்திரி௵ ஐப்பசி௴
அக்டோபர்௴ 1920

பகுதி-௧ 1

திருமுருகாற்றுப்படை

௧.—திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டு ஆங்கு
ஓஅற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை
மறு இல் கற்பின் வாணுதல் கணவன் *
கார்கோள் முகந்த கமம் சூல் மா மழை
வாள் போழ் விசும்பின் வள் உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண் நறுங் கானத்து
இருள் படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன் *
மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண் செம் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர் இழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடை இடுபு
பைந்தாள் குவளைத் தூ இதழ் கிள்ளித்

* இந்தக் குறிகள் முடிப்பிடங்களைக் காட்டும்.

தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்
திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல்
மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்துத்
துவர முடித்த துகள் அறும் முச்சிப்
பெருந் தண் சண்பகம் செரீஇக் கருந் தகட்டு
உள் ஐப் பூ மருதின் ஒள் இணர் அட்டிக்
கிளைக் கவின்று எழுதரு கீழ் நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்
நுண் பூண் ஆகம் திளைப்பத் திண் காழ்
நறும் குறடு உரிஞ்சிய பூம் கேழ்த் தேய்வை
தேம் கமழ் மருது இணர் கடுப்பக் கோங்கின்
குவி முகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண் தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெரியாக்
கோழி ஓங்கிய வென்று அடு விறற் கொடி
வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன்
சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூர் அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப் பூங் காந்தள்
பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன் *
பார்முதிர் பனிக்கடல் கலங்க உள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்
உலறிய கதுப்பின் பிறழ் பல் பேழ் வாய்ச்
சுழல் விழிப் பசுங் கண் சூர்த்த நோக்கின்
கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர் மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூருகிர்க் கொடு விரல்
கண் தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்று அடு விறற் களம் பாடித் தோள் பெயரா
நிணம் தின் வாயள் துணங்கை தூங்க
இரு பேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல் வலம் அடங்கக் கவிழ் இணர்
மாமுதல் தடிந்த மறு இல் கொற்றத்து
எய்யா நல் இசைச் செவ்வேல் சேஎய் *
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் புரிந்து உறையும்
செலவு நீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே *

(தொடரும்.)

ஆறாம் ஆண்டு

அருட் பெருங் கடவுளின் மாட்சிமைப்பட்ட பேருதவி கொண்டு எமது "கலா சிந்தாமணியின்" ஆறாம்ஆண்டு இன்றுஇனிதே தொடங்குகின்றது. இது தமிழுலகத்து உலவப்புகுவான் தொடங்கிய நாள் முதல் இற்றைவரை பலதுறைப்பட்ட மக்கட்கும் வேண்டுவவெல்லாம் தன்னகத்தேயடக்கிக் கற்றார்க்குக் களிப்பும் அல்லார்க்கு அறிவும் நந்தமிழ் மக்கட்குச் செந்தமிழ் மாட்டு ஒருவா ஆர்வமும் ஊட்டிப் பெரும்பயன் அளித்து வருவதென்பது அறிஞர் எவரும் அறிந்ததே.

மக்கட்கு அறிவுச்சுடர் தீட்டற்கும் முற்போக்குக் குரியன விளக்கற்கும் ஏற்ற பல்வகைப் பொருள்களையும், காலநிகழ்ச்சிகளையும் மேனாட்டினரைப் போல அவர் முறையைப் பின்பற்றி நந்நாட்டினும் பத்திரிகை வாயிலாய் அறிவிப்பான் புகுந்து நெடுங் காலமாகியும் அம்முயற்சியில் யாம்இதுகாறும் பிற்பட்டே நிற்கின்றோம். என்னே! பல்லாயிரங் காவதம் நிலப்பரப்பையும், பன்னூறாயிரம் தமிழ்மக்களையும்பெற்றுள்ள நந்தமிழகத்தே இற்றைக்கு எத்தனை பத்திரிகைகள் நிலவுகின்றன? மிகச் சிலவேயன்றோ? அவற்றுள் உறுபயன் அளிப்பனவும் சில விரலெண்ணிக்கைக்குள் அடங்கிவிடக்கூடுமெனின் நமதுநிலைமை எத்தகையது! இது தமிழணங்கின் அரிய நோன்புபோலும்! பத்திரிகைகளின் எண்ணிக்கையெத்துணைக் குறைவோ அம்மட்டே நந்தமிழ் வளர்ச்சியும் உளது. இஞ்ஞான்று பத்திரிகைகள் எவையும் சொல்லளவிலும், எழுத்தளவிலுமட்டுமே தமிழெனக் காணப்பட்டுச் சொற்றொடர்களெல்லாம் வடமொழியாகவே இயங்குகின்றன. பண்டைத் தமிழ் மக்களின் வழி வந்தவர்களான நாம் நம் "முன்னோர் மொழிபொருளேயன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றுகின்றோம்" இல்லை. செவிக்கின்பம் மனக்கின்பம் யாற்றொழுக்காப் பயக்கும் நம் பண்டை இயற்கை மொழியை வாளா விடுத்து அயன் மொழியைக்கைக்கொண்டோம். அரியநோன்புகள் பலவியற்றிப் பிள்ளைப்பேற்றுக் குளவாய துன்பெலாம் பொறுத்துப் பத்துத் திங்களுஞ்சுமந்துபெற்றுப் பொழுதொருவண்ணமா வளர்த்த தன் அன்னை "தன் மகனைச் சான்றோனெனக்கேட்டு ஈன்றபொழுதிற் பெரிதுவப்பான்" எதிர்நிற்பவும் கால மாறுபாட்டால் அவள்தன் சீர்குலைந்து எழிலற்றிருப்பதுகொண்டு அவளை மறந்து அதனாலுண்டாம் பழியையும் மறந்து பகட்டுடன் செல்வாளொரு வேற்றவளைத் தன் அன்னையெனக் கூசாதுமொழிவான் ஒருஇழிமகனை ஒத்தோம். ஆங்கிலர் தாமும் பலநூற்றாண்டுகட்கு முன்னரே தம் மொழிக்கண் புகவந்த பிற மொழியை ஒழிப்ப வழி தேடினர். ஆயின், பல்லாயிரவாண்டுகட்கு முன்னமிருந்தே எந்த மொழிக்கும் மொழி கொடுத் துதவியதும் இன்றும் என்றும் உதவ வல்லதுமான இயற்கை நலங்கள் செறிந்த கடவுண்மொழியுடையரான நாம் வேற்றுமொழிக்கே உறைவிடமானோம். "பாயிருக்கத் தரைகிடத்தும் வினையின் பான்மை பழமிருக்கக் காயுதிர்க்கும்" என்றவாறு ஊழ்வலியென்கோ! அறியாமையென்கோ! மற்றியாதென்கோ! இவ்விழிமையை நாம் சற்றே உணர்வதுண்டெனின் அடையத் தகுவது நாணேயன்றி மற்றென்?

எண்ணில் இன்னலுடன் நந்தமிழணங்கு நோற்ற ஒரு சிறு நோன்பு போலும்! என்னை? காலஞ்சென்ற அறிஞர் சுந்தரம் பிள்ளை, அறிஞர் கனக சபைப் பிள்ளை, அறிஞர் சூரிய நாராயண சாஸ்திரிகள், அறிஞர் கார்த்திகேய முதலியார், அறிஞர் ஆப்பிரகாம் பண்டிதர் முதலியோரும் இன்றும் தமிழ் அன்னையின் அரும்புத்திரருள் ஒருவராய் நிலவு

வோராகிய அறிஞர் செல்வக்கேசவராய முதலியார் அவர்களும் நந்தம் இனிய தனித்தமிழின் தொன்மையையும், எல்லையில் அதன் எழில்நலங்களையும் மாண்புற எடுத்து விளக்கி யிருக்கின்றனர். இன்னார் தம் அரு முயற்சிக்குத் தமிழ் மகார் கடமைப் பட்டவர்களே. அப்பெருமகாரும் தமிழின் தொன்மையும் மாண்பும் எடுத்துக்காட்டினாரன்றி அவற்றைத் தனித்தமிழ் மொழியால் எழுதினாரில்லை. இவ்வொரு குறையும் இல்லையாச் செய்விப்பான்வேண்டித் தம்மருங் காலங்களை யெல்லாம் பண்டைத் தமிழ் நூற்களுக்கு அரிய ஆராய்ச்சியுரை எழுதுவதிலேயேசெலவிட்டுவரும் தலைமைப் பேறுபெற்ற அறிஞர் சுவாமி வேதாசலம் அவர்கள் இப்போது தாம் பதித்துவரும் நூற்களை எட்டுணையும் பிறமொழிக் கலப்பின்றி எழுதி வெளியிட்டுவருவாராயினர். அறிஞர் அ. மாதவையா என்பாரும் புத்தசரித்திரம்ஒன்று தனித் தமிழ் நடையில் எழுதியிருப்பதாக அறிகிறோம். இது தந் தாய்மொழி மாட்டு இவர்களுக்குள்ள ஆர்வத்தையும், நன்றியறிதலையும் செப்பமாக எடுத்துக் காட்டுவதாகும். இவர்தம் கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டுக்குத் தமிழுலகம் கடமைப்படுவ துண்டெனின் போற்றற்கரிய அவர் தம் வழியைப் பின்பற்றுதலே மாண்பாம்.

தமிழின் தொன்மையும் நன்மையும் மாண்பும் எடுத்துக் கூறப்படுதலினும் அவையும் பிற வெவையும் தமிழ் மொழிகொண்டே எழுதப்படுவது தமிழின் நிறைந்த வளர்ச்சிக்கு ஏற்ற கருவியாம் என அறிஞர் அறியக் கிடக்கின்றது. நந்தாய்மொழி வளர்ச்சிக்கு நூலளவின்மட்டும் உழைப்பது ஒன்றாக, பத்திரிகை வாயிலாக முயலுதலே தமிழ்மக்களுக்கு உள்ளக் கிளர்ச்சியையும் ஊக்கத்தையும் விரைவில் உண்டாக்கி நற்பயன் அளிக்குமென உன்னி யாம் இக் "கலா சிந்தாமணியில்" தனித் தமிழ்ப் பகுதி என ஒருபிரிவை உண்டாக்கி யுள்ளோம். அதனில் இதுபோழ்து அண்மையிலுள்ள எமதுநண்பர்சிலருடைய வியாசங்களை எமக்குக் கிடைத்து வெளியிட்டுள்ளோம். இனித் தமிழறிஞர் எவரும் தங்கடமை யுணர்ந்து இம்முறையில் ஈடுபடுவார்களென எண்ணும் எமது விருப்பம் தமிழ்த்தாயினருளால் இனிதே பயன் தருமென நம்புகின்றோம்.

இங்ஙனம் தமிழ்க்கடவுள் அருள்புரிக!

சுபம்.

சி. மு. நடேசன்.

சமயாபிமானம்

யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகின்றவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத பொழுது பயன்பெறான். அந்தச் சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக்கப்பட்ட பாவங்களும், அப்புண்ணிய பாவங்களின் பலங்களாகிய சுகதுக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும் அவ் வழிபாட்டினாலே பெறப்படும் பயனும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத பொழுது அவ்வொழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படுஞ் சமயநூற் கல்வி கேள்விகள் இல்லாத பொழுது அவ்வறிவு உதியாது. ஆதலால் கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இம் மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு. ஆதலினால், வித்தியாசாலைகளைத் தாபித்துப் பிள்ளைகளுக்குத் தங்கள் தங்கள் சமயநூல்களையும், நீதி நூல்களையும், கருவி நூல்களையும் கற்பித்தல் எல்லாச் சமயத்தாருக்கும் கடனேயாம்.

சமயநூற் றுறையில் பிரசித்தி பெற்ற

நமது தேசத்திலே இப்போதுள்ள வித்தியா சாலைகளில் சமய பாடங்கள் நமது சிறுவர்களுக்குப்போதிக்கப்படாமையால் நமது தேசத்திற்கே பெருங்கேடு சூழ்வதாயிற்று.

அவர்கள் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்னும் மேலைத் தேச நவீன நாகரிக இருளில் மூழ்கி அலைகின்றார்கள். இதைக் கண்ணுறும் கிறிஸ்தவ பாதிரிமார்கள் தங்கள் மாயவலையைவீசித் தங்கள் தொகையை அதிகரிக்கின்றார்கள். கிறிஸ்தவரில் சிறுவரும் பெண்களும் தங்கள் சமயநூலை அறிந்திருக்கிறார்கள். இந்துக்களிலோ குருமார்களுக்கே தாங்கள் செய்யும் பூசை முதலான வழிபாடு இன்னதென்று தெரியாது. இதை உற்று நோக்குங்கால் நமது நிலைமை இப்போது எவ்வளவு ஈனஸ்திதியி லிருக்கிறதென்று அறியலாம். சமயநூ லுணர்ச்சி யுள்ளோர் நாளுக்கு நாள் குறைந்து கொண்டேயிருக்கிறார்கள். இன்னுஞ்சிலஆண்டுகள் சென்றுழி என்னாகுமோ அறிகிலேம்.

நமது இந்துக்களுள்ளே அநேகருக்கு நாயன்மார்கள், ஆழ்வாராதியர், புலவர்கள் சரிதம் தெரியாது. ஆனால் கிரீக்குத்தேச சரிதம், விவிலியநூற் சரித்திரம் முதலியவைகள் நன்றாய்த் தெரியும். உயர்தரக் கல்வி பயின்றுள்ள நமது சகோதரர்களில் எத்தனைபேர் பிழையின்றித் தமது தாய்ப் பாஷையில் பேசுதல் அல்லது எழுதுதல் கூடும். மிகச் சிலரே. இது தான் தற்கால சுதேசாபிமானமும் நாகரிகமும் போலும்.

சமயநூற் பயிற்சிக்கு இன்றியமையாதது சுதேச பாஷா விர்த்தி ஆதலினால் ஒவ்வொரு இந்துபாடசாலையிலும் சுதேசபாஷாபி விர்த்தியும் கலை நூற்பயிற்சியும் அத்தியாவசியம் அமைக்கப் படவேண்டும். இதற்காக இந்துக்களாகிய நாம் இனியேனும் முயற்சி செய்து அவைகளை வளர்ப்போமாக. இது செய்யாதவரையில் நாம் சுதேசாபிமானம் பாராட்டல் பிறர் நகைப்பிற் கிடந்தருவதாகும்.

பக்தி

உலகத்தில் தோன்றிய மக்களனைவரும் இறுதியாக விரும்புவது சிந்தையும் மொழியும்செல்லா நிலைமைத்தாகியவீடு பேற்றையேயாம். அதனா லன்றோ "பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாமே" என்று ஒரு பெரியாருங்கூறுவாராயினர். அம்முக்தியோ உள்ளங்கனிந்து நிகழும் நிகழ்ச்சியாகிய அன்பில்லார்க் கெட்டாதது. புத்ரன் மனைவி முதலியோர்களிடத்து நிகழும் அன்பை **காமமென்றும்**; கிடையாதபொருளின்மீது நிகழும் பிரியத்தை **இச்சையென்றும்**; கர்மானுஷ்டானங்களின் நிகழுமன்பை **சிரத்தை யென்றும்**; தன்னினுந் தாழ்ந்த எல்லாப் பொருளிடத்துச் செல்லும் அன்பை **கருணை யென்றும்**: இறைவன் முதலியோர்கள் மாட்டு உள்ளங் கனிந்து நிகழும் நிகழ்ச்சியாகிய அன்பின் முதிர்ச்சியைப் **பக்தி** யென்றும் முறையே ஒருவாறு வகுத்துக் கூறலாம். அது **பர பக்தி; அபர பக்தி** யென இருவகைப்படும். எல்லாவற்றையும் இறைவனுக்கென்றே அர்ப்பணஞ் செய்து உபாஸித்த கண்ணப்பர் போன்றவருடைய பக்தியே பர பக்தியாம். நமது மணி வாசக பெருமானும் "கண்ணப்பனொப்பதோர் அன்பில்லை" என்று அருளியுள்ளதை உய்த்துணரற்பாலது. பலனை விரும்பி உபாஸித்தல் அபர பக்தியாம். இவ்விரு வகைப் பக்திகளில் தலைசிறந்து விளங்குவது பர பக்தியே யாகும். "உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும் தறி நிறுவி உறுதியாகத் தன்னரிய அன்பெ

ன்னுந் தொடர்பூட்டி யிடை படுத்தி"ப்
பக்தி யென்னும் புனலையாட்டிச்சத்தினி
பாத மென்னும் தன் மலரைப் பரிந்து
சாற்றித் துரிய மென்னும் திபத்தையே
ற்றி வழிபாட்டினை யடைந்தா லன்றி
இறைவன்பால் மனம் உரம் பெற்று நில்
லாது. அவ்வாற்றலைப்பெறமான்மழுவே
ந்திய விரிசடைக் கடவுளையாவது சங்க
மும் திகிரியுமேந்திய செங்கண் மாலையா
வது பரம்பொருளெனக் கொண்டு வழி
படல் வேண்டும். அவ்வாராதனை வேத
சாஸ்திரங்களிற் கூறியவாறு பாணலிங்க
ஸாளக்கிராமாதிகளிற் செய்பலாம்.இது
பாமரர்களுக்கெனச் சாதித்து இக்கால
த்து நவீன நாகரீகப் பித்துடையோர்
பலர்வாயில் வந்தன வந்தனவாறு பிதற்
றுவர். மஹா துறவியாகிய பட்டணத்
துப் பிள்ளையும் இறைவனைப் பூசைசெய்
யுந் தருணத்தில் மனம் ஒரு நிலை யடை
யாமல் சலித்துக்கொண் டிருத்தலைக்

"கை யொன்று செய்ய விழியொன்று
நாடக் கருத்தொன் றெண்ணப்—பொ
ய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்
புலால் கமழும்—மெய்யொன்று சாரச்
செவியொன்று விரும்பும் யான்—செய்
கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய்
வினைதீர்த்தவனே" என்னும் பாட்டால்
கூறியுள்ளபோது, மனத் திண்மையின்
றி உலக வியாபாரங்களிலேயும் சிற்றின்
பங்களிலேயும் உழன்று வரும் பெரும்
பாலோர்க்குக் குண உபாசனை இன்றி
யமையாத தென்பது சொல்லாமலே
விளங்கும். ஞானிக்கே விக்கிராராதனை
யின்றிப் பரம்பொருளை உபாசித்தல் முடி
யாதென்றால் ஏனையோர்களைப் பற்றி
ஈண்டுக் கூறுவானேன். நமது வீட்டில்
ஒருநண்பரை யழைத்து மரியாதை செ
ய்ய ஆவல் கொள்ளுவதாக வைத்துக்
கொள்வோம். முதன் முதலில் அவரை
ஒரு பீடத்தி லமருமாறு செய்து அவர்
கரத்தில் ஒரு நறுங்கனியை யளிக்கின்
றோம். அக்காலையில் அவருடைய
ஆத்மா ஆனந்த மடைகின்றது. அதற்
குக் காரண மென்னை? உபசரித்தது
எதை? மகிழ்ந்தது எது? என மு
றையே கூர்ந்து கவனிக்குமிடத்து நாம்

உபசரித்தது அங்கம்; மகிழ்ச்சி யுற்றது
அங்கியாகிய ஜீவாத்மா வெனத் தெற்
றென விளங்கும். இந்நியாயத்தாற் புறத்
துறுப்பினு லன்றி அரூபனாய் விளங்கும்
ஜீவாத்மாவை நேரில் உபாசித்தல் முடி
யவே முடியாது. ஆனால் புறத் துறுப்
புறுக்களே மகிழ்ச்சி யடைகின்றன வெ
னக் கொள்ளக் கூடாதோ வெனின்!
அற்றன்று; புறத் துறுப்புக்கள் யாவும்
ஜடப்பொருளே யாதலின். ஆகையால்
புறத்துறுப்பிற்குச் செய்யும் உபசாரத்
தினால் அகத்தின்கண் விளங்கும் ஜீவாத்
மாவே திருப்தி யுறுகின்றது னென்பதே
கொள்ளற்பாலது. இவற்றை நோக்கு
மிடத்து உபசரித்த லென்பது உருவப்
பொருளாகிய அங்கத்தினால் இயலுமே
யன்றி அங்கியை நேரில் உபசரித்தல்
இயலாதென்று தெரிந்து கொண்டது
போல் சரம், அசரம் என்பவைகளைத்
தன்னுள் ளடக்கிய பிரம்மாண்டத்தில்
நடைபெறும் செய்கைகளுக் கெல்லாம்
காட்சியாய் விளங்குபவன் பரமாத்வா
கிய பரமேச்வரன் அவனுக்குச்சரம்,அச
ரம் யாவும் உறுப்புக்களாய் விளங்குகின்
றன. இக்கருத்தை யமைத்தே "தானே
திசையோடு தேவருமாய் நிற்குந்—தா
னே யுடலுயிர் த்த்துவமாய் நிற்குந்—
தானேகடன்மலை யாதியுமாய் நிற்குந்—
தானே யுலகிற் றலைவனுமாமே" எனத்
திருமூலர் நம்போன்றவர்களுக்கு அறி
வுச்சுடர்கொளுத்தியிருப்பதையுங்கண்டு
தெளிக. ஆனதினால் இறைவன் அருள்
பெறுவதற்குப் பிரம்மாண்டத்தில் அட
ங்கியுள்ள பொருட்களின் யாதானுமொ
ன்றைப் பற்றிக் கொண்டு வழிபடல்
வேண்டும். பிரம்மாண்டத்தி லுள்ள
பொருள்கள் யாவும் பஞ்ச பூதங்க
ளிலே யடங்கும். பஞ்ச பூதங்களே
இறைவனுக்கு அங்கங்களாம். அவ்வங்க
வழிபாடு இறைவனை யடைய அறிஞர்க்
கும் பாமரர்க்கும் இன்றியமையாததே.
ஆயின் அது இருவகைப்படும். ஒன்று
இறைவன் எங்குமுளான் என்னும் பாவ
னை முதிர்ச்சி யுறுமாறு தொண்டு செய்
வது.மற்றொன்று சிவன்,விஷ்ணு முதலிய
மூர்த்திகளைப் பாவித்தலில் ஆண்டான்

அடிமைத்திறத்தில்தொண்டுபுரிவது. இவ்விருவகைவழிகளிற்சென்ற பக்திசிகாமணிகளை நெருப்பிலிடினும், கடலிலாழ்த்தினும், மலையின்மீது உருட்டினும், நஞ்சையூட்டினும், சித்தம் சிறிதும்கலங்கார். அதற்கு பிரஹ்லாதனை மேற்கோளாகக் கொள்ளலாம். தற்காலத்தில்இத்தகைய நெறியை விட்டு, மனஸ் சுத்தம் வேண்டும் என்று போலியாகப் பறைசாற்றிக் கொண்டு ஆலய வழிபாடில்லாமலும், தம் கரத்தால் பூஜை செய்யாமலும், பல ஆசுர வேதாந்தம் பேசி அல்லற்பட்டு வாணாளை வீணாளாக்குகின்றனர். அத்தகைய ரிடத்துப் பொதிந்துள்ள ஒழுக்கங்களும் உரைகளும் "இடிப்பது சிவன் கோயில், ஓதுவதுவேதாந்தம், கவர்வது அயலார் பொருள்" என்னும்பழமொழிக்குஇலக்கியமாயுள்ளன. இன்னுஞ் சிலர் சிவனுக்குத் தொண்டு செய்யுங் காலத்து விஷ்ணுதூஷணை புரிவதும், விஷ்ணுவுக்குத் தொண்டு செய்யுமிடத்துச் சிவனையிகழ்வதும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வாறுள்ளோர்என்றுமொன்றும் கடவுளருளையடையார். எண்குணம் படைத்து ஒருவாற்றானும் ஒப்பின்றி நிற்கும் கடவுளே யெனச் சகல மதங்களும் கோஷிக்கின்றன. மதங்களுக்குள் இறைவனை வாழ்த்தும் துறையில் பல பேதங் காணப்படினும் கடைசியில்ஒருவன் அண்ணுநிலை (முக்திநிலை)யில் அடையும் இறைவன் தான் ஒன்றேயெனத் தெற்றெனக் காட்டுகின்றது. மதங்களெல்லாம் மனோ தர்மத்திற் கேற்ப அடங்கி யுள்ளன. முதலிற் கடவுளை மனிதன் குரூரமான அறம் கூறும் அவைத் தலைவராகக் கொள்ளுகின்றான். பின் மலர்தலை யுலகிலோர் அரசனாய் உட்கொள்ளுகின்றான். கடைசியில், படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழிலினைப் பெற்ற முதல்வோனாக வேத்திப் "பேதமற நின்றிடும் பரஞ்சோதி" யாக வழிபடுகின்றான். அதற்குப் பொருந்துமாறு கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்பரும் "தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன—தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே—வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்—ஊழ் கொண்ட சமயத் தன்னா ருருவுகண் டாரை யொத்தார்." எனஸ்ரீராமபிரானைவருணித்துப்பாடியுள்ளார். நமது ஸநாதன தர்மமதமாகிய ஹிந்துமதத்தில் பெரும்பான்மையும் படைத்தற் றொழிலைப் பெற்ற நான்முகனைப் பேதங் கற்பித்துக் கூறுதலரிது. காத்தற் றொழிலுடையோனும், அழித்தற் றொழிலுடை யோனுமாகிய அரி அரன் முதலியவர்களைத் தாம் வேறுபடுத்துவோர் பல திறத்தின ராவர். அக்கூற்று உபநிஷத் முதலிய நூல்களை முற்றும் நுண்ணறிவுடன் ஆராய்த லிலராய் நுனிப்புல் மேயுங் குணமுடையார்க்குத் தென்றிசைக் கூற்றுப்போல் தோற்றமுறும். அத்தகையர் நன்கு பன்னூல்களைக் கற்றாராய்ந்து வழக்காற்றிற் கொண்டுவரின் இறைவனைத் தூற்றிக் கூறும் விபரீத புத்தி எழாமலொழியும். ஒரு நல்லாசிரியரிடம் பலமாணவர் பற்பல நூல்களைக் கற்று வருகின்றனர். பாடங்கேட்டலிற் பொழுதொடுசென்று வழிபாடு செய்வதில் முனியாராகி யொழுகும்மாணவரைக்கண்டு மகிழ்ச்சியடைகின்றார். கேட்ட பாடங்களை மீண்டும் கற்காது விட்டு மேன்மேலும் கற்கத் தொடங்கும் மாணவரைக் கண்டு சீறுகின்றார். களி மடி மானி காமியாய்த் திரியும் மாணவரைக் கண்டு சினந்து கோலோச்சித் தண்டம் இறுக்கின்றார். இம்மூன்றுவிதத் தன்மை ஒரே ஆசிரியர்பால் நிகழ்வதைக் கண்டு 'இவர்நல்லவர் இவர் வன்கண்ணர்' என்று கூறின் எவ்வாறு ஒவ்வாதோ அதுபோல் விரிநீர் வியனுலக விஷயத்தில் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணம் ஒவ்வோர் காலங்களி லெழும் இறைவனை முறையே படைத்தற் கடவுள், (பிரம்மா) காத்தற் கடவுள் (விஷ்ணு) அழித்தற் கடவுள் (ருத்திரன்) என நாமம் புனைந்து வணங்கி வருவதை ஏற்றத் தாழ்வு படுத்திக் கூறுவது ஒவ்வாததேயாம். அவ்வாறு கொள்ளாது ஆத்திரங் கொண்டு சிவன் விஷ்ணுவைவிட மிகத் தாழ்ந்தவர் என

இறுமாப்புடன் வாய் கூசாது பேசுதல் தகாது. அவ்வாறு பேதா பேதங்களைக் கற்பிப்போர் பாவிகளே யாவர்களென்பது வெள்ளிடைமலையே. அன்புசுரந்து அருள்வடிவான பக்தன் வழிபடுங் கடவுளை உயர்த்திக் கூறுவன். சைவ சமயாசாரிகளும் ஆழ்வாராதிகளும் தாம்தாம் கொண்ட சிவன் விஷ்ணு மூர்த்திகளை தியானத்தில் வழிபடுங்கடவுளாய்க்கொண்டு உயர்த்திக்கூறியுள்ளார்கள். அவைகளை வேறு பொருட்படுத்தி சில விதண்டாவாதிகள் மதத் துவேஷங் கொண்டு மண்டையை யுடைத்துக்கொண்டு சோகாப்புறுகின்றனர். திருநாவுக்கரசும் "சிவனாகித் திசைமுகனாகித் திருமாலாகிய" என்றும், நம்மாழ்வாரும் "உணர்ந் துணர்ந் துரைத் துரைத் தரியயன் அரனெனு மிவரை, உணர்ந் துணர்ந் துரைத் துரைத்து இறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே" என்றும் அருள்பாலித்துக் கூறியுள்ள வற்றைக் கண்டுணர்க. சிவன் என்னும் சொல்லுக்குப் பொருள் மங்கலமேயாம். நாராயணன் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் ஞானநிலயமேயாம். மங்கலமே ஞானம் ஞானமே மங்கலம். ஞானத்தைவிட மங்கலகரமான பொருள் வேறொன்றுமில்லை இது நன்குணரும் தகைமையினை யுடையார்க்கு அரனதிகம், உலகளந்த அரி யதிகம் என்னுங் கொள்கைக்கே யிடந் தராவாம். அஃதுணரா துழல்வோர் மூர்த்தித் துவேஷமாம் பேய் பிடித்து பாவம் என்னும் படுகுழியில் இறங்கித் துன்ப மடைவர். உதாரணமாக ஈண்டு ஒரு கட்டுரைக் கதையை நிகழ்த்துவாம்:— (தொடரும்)

வாசுதேவ ஐயர்,
காஞ்சிபுரம்.

கண்ணப்பரன்பு

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்—முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்—அன்பினுள் ளாகிய மரும் அரும்பொருள்—அன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே. (திருமந்திரம்.)

அகமும் புறமும், உடலும் உயிரும், யாவும் அன்பேயாகிச் செழித்தோங்கி யாவரையுங் காந்தம்போல் கவர்ந்து ஸர்வலோக சரண்யனாக விளங்கும் ஸர்வேச்வரன், உள்ளன்பினால் உள்ளத்தைத் தம்பாலே செலுத்திய உத்தமர்க்கே உறவாவன் என்பது நமது பெரியோர்களது முழு நம்பிக்கை யாகும். அதுவே நமது சாஸ்திரங்களின் மூல முதற் கொள்கையுமாம்; தன்னைப் பற்றிய நினைவை ஒழித்து அனுபவ மார்க்கத்து உழன்ற பரமஞானிகளது உபதேசமு மதுவே. நமக்குப் பலவகைத்தான அவயவங்களையும், மற்றைய பல்பொருள்களையும் கடவுள் கொடுத்துஉதவியது, மயக்க வழிகளில் பாய்ந்து, சிற்றின்பமில்லாவிடினும் பேரின்ப வழிப்படாத விஷயங்களில் உழலவல்ல. அவர் கொடுத்த பொருள்களுக் கெல்லாம் அவரே உரிமை யுடையவர் என்பது நமது மனத்துள் தோன்றாதிருப்பதெல்லாம் நமது அறியாமையால் தான். இவ்வறியாமையைப்போக்கும்மருந்து அன்பேயாகும். மூர்க்கனையும் தன் வயமாக்கி நல்வழிக்குக் கொண்டு வரச்செய்யும் பெருமை அதற்கே உண்டு. மனைவி மக்கள் பால் இருக்கும் ஆசையானது, வர வர விரிந்து, பலரிடம் பரவி, யாவர்க்கும் இங்கிதம் செய்யும் பேரன்பாகச் செழித்தபோது, அதற்குப் பகை உறவுஎன்ற வேற்றுமையற்று எப்பொருளிடத்தும் ஸமத்ருஷ்டியே ஏற்படும். அச்சமயமே அது அயல் வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி யிருப்பாரையும் தன்வழிப்படுத்தி மனோலயமடையச்செய்யும். அத்தகைய

அன்னையே தமக்கு மீண்டும் அளிக்க வேண்டுமென்பது கடவுளது திருவுள்ளம் எனில் தவறாகாது. ஸர்வ சுதந்தரங்களையும் நமக்கு அளித்த அவர், நாம் நமது புலன்களின் வழியிற் செல்லாது இவ்வுலக வாஞ்சை யற்று; கிடைத்ததெல்லாம் அவரது பொருளே என்னும் திட நம்பிக்கையுடன் அவற்றை அவர்க்கே அளிக்க விரும்புவது ஓர் விதத் திருவிளையாடலே யாகும். அவ் விளையாடலின் பெருஞ்சுகத்தை அன்புடையாரே காணல் தகும். மற்றையோர்க்கு அது காணினும் தெரியாது; கருத்திலும் ஏறாது. திரையின்பின் இருக்கும் பொருளைக் காண்பது எளிதோ? செல்வக் கள் குடித்து, காமக் குரோத வெறி பட்ட வாடும் பரலோக நோக்கமற்ற குறுகிய நோக்கினர்க்கு அன்பின் பிரபாவமெப்படித் தெரியும். அன்பென்பது எளிதல்ல. அது தன்னையும் தன்னைப் பெற்றாரையும் பெருமை பெறச் செய்யும். அது எல்லாரிடமும் பரிமளித்துப் பரிமளிக்கச் செய்யும். தெய்வ மணம் வீசுவது. அவ்வாடை பட்ட விடமெல்லாம் பரிசுத்தமே ஏற்படும். உலோக மெவற்றையும் பொன்னாக்கும் ஸ்பர்சவேதி போல், அது தன் வழிக்குள் வந்தாரனைவரையும் புனிதமாக்கி பரம நிலை நாடமுந்தச் செய்யும். தன்னயம் என்கிற நச்சு மரத்தை வேரோடறுக்கும் வன்மை அன்புடையார்க்கன்றி யார்க்குண்டு? அன்புடையார் என்பும் பிறர்க்குரியர் அல்லவா? அத்தகைய அன்பு வாய்ந்தவர்க்கு இவ்வுலக வாழ்க்கை எதற்கு? ஸர்வ மதத்துள்ளும் ஞானோப தேசங்கள் எல்லாம் ஸம திருஷ்டியை ஏற்படுத்தி அன்பின் வழியில் மனத்தை ஓட்டி விருப்பு வெறுப்பு என்னும் லக்ஷ்யங்களைக் கடந்து கைவல்ய நிலையில் விளங்கவன்றோ? அன்புடையார் அத்தன்மை பிறவியுடன் வந்திருக்க அவர்க்குக் குருப தேச மென்பதுகூட வேண்டுமோ? பக்குவ மடைந்த அன்பு நிலைத்த மனத்தார் வணக்க வழியிற் சென்று, யார் யார் என்ன சொல்லினும் அதன் கண்ணுள்ள உண்மையைக் கைக்கொண்டு அவரது சிறுமொழிகளைப் பேருபதேசங்களாகக் கொள்ளினும், அவர்களது மனத்தைக் குளிர்ச்செய்யவேண்டிய உபதேசம் பிறர் புதிதாக என்ன செய்ய முடியும்? மச்சுமேல் ஏறமுடியாதவர்க்கன்றோ ஏணி வேண்டும்? மற்று மாடிமேல் இருப்பார்க்கு ஏணி இறங்க அல்லாமல் மற்றெதற்கு வேண்டும்? தம்மைப்போலவே பிறரைநோக்கி, அவரது குறைகளை மாற்றி, யாவர்க்கும் இதமே செய்து, 'தான்' என்னும் நினைவற்று, நின்றார்க்கும் வானோர்க்கும் உயர்ந்த நிலையே யல்லவா கிடைக்கும்? அன்புடையோர் எல்லாம் பிறர்க்கே உடையர் அன்றோ? அதிலும், இவ்வுலகத்து ஆசையை முற்றுந் துறந்து, கடவுளிடத்து ஈடுபட்டு, தமது உடல்பொருள் ஆவி யாவும் அவர்க்கே அற்பணஞ் செய்யும் மனோதிடங்கொண்ட பெரியார் பேரின்ப மெய்துவ தசாத்தியமா? அத்தகைய மனோதிடம் விட்டகுறை தொட்டகுறை இவற்றாலும், அனுபவத்தாலும், குருஉபதேசவழிபாட்டாலும், அல்லது இயற்கையில் ஏற்படும் மனச் செம்மையாலும் உண்டாகலாம். எந்தக் காரணத்தால் ஏற்பட்டாலும், அந்நிலையை அடைந்தார் உயர்ந்த நிலைக்கே ஆளாவர். அத்தகையநிலையை அவர் அடையப் பெருஞ் சாதகங்கள் ஒன்றும் வேண்டாம். பக்தியின் பொலிவே அவரது மனத்தின் விரிவு. அவ்விரிவே அன்பின் பெருக்குமாகும். ஆகவே அன்பினால் வழிபட்டார் கடவுட் டன்மையை யடையாமலெப்படி இருக்க முடியும்?

அன்பு சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

என்னும் திருமூலரது மனோபாவத்தை அன்புடையாரே உணர முடியும். கடவுளிடத்து அன்பு தழைத்து உடற்பரவசமாகி அவரோடு ஒன்றாகிவிளங்கிய கண்ணப்பரினும் அன்பிற் பெரியார் யாருளர்? அவரது பக்திப்பொலிவின் பெருக்கை எண்ணி அன்றோ,

மார்க்காவர்த்தித பாதுகா பசுபதே ரங்கஸ்ய கூர்சாயதே—கண்டூ ஷாம்பு நிஷேசநம் புரரிபோர் திவ்யாபிஷேசாயதே—கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேஷகபளம்நவ்யோப ஹாராயதே—பக்தி:கிம் நகரோத்யஹோவன சரோபக்தா வதம் ஸாயதே||

[பலமுறை கானத்து வழி நடந்து மாசு படிந்த செருப்பே பசுபதியின் கண்ணிற் கிடும் பெருங் கூர்ச்சமாய் விட்டது! வாயிலிருந்து வழியும் எச்சிலே திரிபுரங்களை எரித்த அவ் வெம்பெருமானுக்கு அபிஷேகத்திற்கேற்றதிவ்ய தீர்த்தமாய் விட்டது. சற்றே சுவைத்து இனித்த எச்ச மாம்ஸமே புதிதாக அட்டுப் படைத்த நிவேதனமாயிற்று! காட்டில் அலையும் வேடன் பத்தர்க்குள் முதல்வனானான்! ஹா! பக்தியிருந்தால் எது தான் ஆகாது?]

என ஸ்ரீமத்சங்கராசாரியர் அவர்கள் மனம் நெக்கு நெக் குருகினர். அவ்வன்பின் பெருக்கின் வைபவத்தைச் சற்றே கவனிப்பது தவறாகாது; அதை விரிப்பது நலங் கெட்ட நாவிற்கும் நயந்தருமன்றோ?

குறும்பர் குடியிற் பிறந்து பெரும்பேறுபெற்ற இக்கண்ணப்பர் குலத்தால் வேடர்; ஸ்ரீகாளஹஸ்தி எனத் தற்காலம் வழங்கி வரும் ஊர் சுற்றுப் புறக் காடுகளிடமிருந்த பொத்தப்பி என்னும் நாட்டில், உடுப்பூர் என்னும் தலை நகரத்தில் ஆண்டுவந்த நாகன்என்னும் வேடவரசனது பிள்ளையில்லாக் குறையைப்போக்கிப் பெரும் புகழ்தந்த பெரியவர்; வேடுவர் கூட்டத்திலேயே இளநாள் தொட்டுப் பழகிவரினும் மனம் அழகியவனங்களில் அமைந்த இயற்கைப் பொலிவிலீடுபட்டு உயர்ந்தவர். நெடுநாளாகப் பிள்ளைப் பேறு இன்றித் துயரடைந்த நாகன், தனது குல தெய்வமாகிய முருகக் கடவுளுக்குப் பலவித தொண்டு செய்து, அவர் சந்நதியில் வேட்டுவமுறைப்படி சேவல்களையும் மயில்களையும் விடுவித்து, விழாக்கள் எடுத்துக் கொண்டாடி, அவரது அநுக்ரஹத்தினால் இம் மகனைப் பெற்றார். பிறந்ததும் அக்குழந்தையைக் கையில் ஏந்துதற்கு அருமையாக அதாவது திண்ணியதாக இருந்ததனால் அதற்குத் திண்ணனென வேடர்களெல்லாம் திருநாமஞ் சூட்டினர். அதுவே தகுமெனத் தேவரும் எண்ணினர். கண்ணப்பர் திண்மை அவர் முன்னறிந்தனர் போலும்! அப்பொழுது யாவரும் ஆனந்த மிகுதியால் கூத்தாடினர். நாகனும் பலவித தானங்கள் செய்து தங்களது குல மரபுபடி சனங்களுக்குப் பலவித நன்மைகளைச் செய்தான்; கடவுள் காப்பு எடுத்தான்; குழந்தையை வேம்பிழைத்த பலகறைக் கோவை முதலிய வேடர்க்குள் வழங்கும் ஆபரணங்களால் அணிவித்தான்; குழந்தையின் வளரும் பருவத்துக் கேற்ப, வன தெய்வங்களுக்குக் காய் கிழங்கு முதலிய நிவேதனஞ் செய்து அவற்றை மகிழ்ச்சி பெறச்செய்தான்.

திண்ணனார் வரவர வளர்ந்து சிறுகுழந்தைகள் விளையாடலெல்லாம் செய்து தமது தாய் தந்தையரைச் சந்தோஷப்படுத்தி வந்தனர். இடையிற்கட்டிய பலகறைக்கோவையும, கால்களிலிட்ட சதங்கையும் ஒலிக்க, காதில் இட்ட குதம்பையும் கழுத்தில் தொங்கும் புலிப்பல் தாலியும் அசைய அவர் குதித்துக்குதித்தாடி,

"தண்மல ரலங்கற் றாதை தாய் மனங் களிப்ப வந்து, புண்ணியக் கங்கைநீரிற் புனிதமாந் திருவாய் நீரில், உண்ணனைந் தமுதமூறி யொழுகிய மழலைத் தீஞ்சொல், வண்ணமென் பவளச்செவ்வாய் குதட்டியே வளரா நின்றார்."

மற்றுந் தமதுகுறும்புகளாலும் அவர் தாய் தந்தையரைக் களிப்பித்தனர்.

இவ்வாறு ஐந்து வருஷம் ஆனதும், திண்ணனார் சிறுவர்களுடன் கூடிக் காட்டுள் சென்று, சிறிதும் அச்சமில்லாமல் வெகு ஸாகஸமாகக் கொடியகாட்டுமிருகங்களுடன் விளையாடுவதைக் கண்ட நாகன் தன் மகனை வில்வித்தையில் பயிற்ற ஆவல் கொண்டான்; பெரியார் கூட்டமொன்று சேர்த்தான்; நல்ல நாள்

ஒன்று பார்த்து, அந்நாளில் யாவரும் விஜயம் செய்யவேண்டுமெனப் பக்கத்து மலைகளில் ஆட்சி செய்து வந்த மறவர்களுக்கெல்லாம் தூது விடுத்தான். அவர்கள் யாவரும் வந்தனர்; பலவித வரிசைகளும் எடுத்தனர். பல உறவினர் கூட்டமும், ஜனங்கள் தொகுதியும் பெரு மகிழ்ச்சியுடன் விளங்க, வில்விழா வெடுக்கவென நாகன் ஆணையிட்டான். உடனே தேவராட்டிகள்,

"பான்மையிற் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞர் ஏந்தத், தேனலர் கொன்றை யார்தம் திருச்சிலைச் செம்பொன் மேரு, வானது கடலிநஞ்ச மாக்கிட அவர்க்கேபின்னுங், கானவூ னமுத மாக்குஞ்சிலையினைக்காப்புச்சேர்த்தார்."

அவ்வாறு காப்புச் செய்தானதும், அவ்வில்லிற்குக் கட்டிய காப்புநாணாகிய புலி நரம்பைத் திண்ணனாரது கையிற் கட்டினர்; அச்சமயம் மலைக் குறவரது கூட்ட முழுதும் பெரிதும் ஆரவாரஞ் செய்தது. தேனிலும் தினைமாவிலும் பேரவாக்கொண்ட அக்கூட்டத்தார்,

"செந்தினை யிடியுந்தேனு மருந்துவார்; தேனிற் றோய்த்து, வெந்தவூன் அயில்வார்; வேரி விளங்கனிக் கவளங் கொள்வார், நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார்; வெவ்வே, றந்தமில் உணவின் மேலோ ராயின ரளவி லார்கள்."

இவ்வாறு உண்டுங் கண்டுங் களித்த நகரமக்கள் வில் விழாவினைக் கொண்டாட வில்லாசிரிய னிருக்குமிடம் நெருங்கினார்கள். பின் எல்லாருமாக அச் சிற்றூரை வலம் வந்து களிப்போடிருக்க, விழாவின் ஏழாவது நாளன்று உச்சி வேளையில், நல்ல முகூர்த்தத்தில், எங்கும் மங்கள சப்தமே குடிகொள்ள, பலவாத்தியங்களின் ஒலியும் இனிக்க மயங்கியிசைக்க, நாகனை யன்றி மற்றைய வேடுவரது உள்ளமும் இளைக்க, விதிமுறைப்படி தொன்று தொட்டு உபதேசஞ்செய்துவந்த வில்லாசிரியரைக்கொண்டு திண்ணனாரை யாவரும் சேர்ந்து வில்லைக் கையாற் பிடிக்கச் செய்தார்கள்; பின் அவரை வில் தொழிற்சாலைக் கழைத்துச் சென்றார்கள்; அங்கு விதிப்படி செய்யவேண்டிய பூஜை மரியாதைகள் முதலியனசெய்ய, திண்ணனார் காட்டில் உலவும் கொடிய பிராணிகளின் உயிரைச் செகுக்க உதவும் வில்லினை இம்மாயாந்தகாரங்கவித்த ஜடமாகிய உடற் காட்டுள் வாழும் காமக்ரோதாதி விலங்குகளின் மூலங்களை அறுக்கவெனவே போலும் அம்புகோத்துக் கையிலேந்தி விற் பயிலக் கற்றனர். அவ் விற் பயிற்சியும் வர வா வளர்ந்து திண்ணனாரது பெருமைக்கு அளவையாய்ஓங்கி, அவரைத் தெய்விகம் விளைத்து அன்பு கோல்வாங்கும் ஆவலில் தூண்டாம லிருந்திராது. அது நமக்குப் பின்னால் தானே தெரியவரும். (தொடரும்.)

வி. சேஷகிரி சாஸ்திரி, பி. ஏ.

முப்பொரு ளாராய்ச்சி

காண்டல், கருதல், உரையாதிய அளவைகளானும், மனமாதிய அந்தக்கரணங்களானும், பிற எவற்றானும், எவ்வகைத்தானும் உள்பொருளெனத் தெள்ளிதிற்றெளிய எட்டியும் எட்டாமன் மறைந்தும் இடந்தொறுமீண்டிய பொருள்களை எல்லாம் இனமுறை நிரைத்துத் தொகுத்து வகுப்பின் அவை யனைத்தும் பதி, பசு, பாசம் எனும் முப்பெரும் பிரிவுகளிலடங்குமென் றறிஞர் கூறுப.

இல்பொருள் யாண்டும் இல்பொருளேயாம்; உள் பொருள் கால தேசங்கட்கிசைய நிலைமாறித் தோன்றி மறைந்து விகார மெய்தினும் எஞ்ஞான்றும் உள்பொருளே யாகலின் சொல்லிய பதி, பசு, பாச மாகிய மூன்றும் ஆதியு மந்தமுமில்லா நித்தியப் பொருள்களா மென்க. அவை அங்ஙனமாயினும் தம்முள் ஒத்த படித்தன்மையும் ஆற்றலுமின்றி ஒன்றற்கொன்று வேற்றியல் புடையவாம்.

இப்பெரும் பெற்றிய முப்பொருள்களின் பொது வியல்பு சிறப்பியல்புகளை விரித்துப்பேசும்நூல்கள் யாவையெனில், அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்தற் பொருட்டு அவர்கண் மீதுவைத்த பெருங் கருணையினால் சதாசிவமூர்த்தியாய் எழுந்தருளித் தற்புருடம் முதலியநான்குமுகங்களினால் தோற்றுவித்த இருக்காதி நான்கு வேதங்களும், ஈசானமுகமாகிய உச்சி முகத்தினால் தோற்றுவித்த காமிகமுதல் வாதுளமிறுதியாகிய இருபத்தெட்டுச் சிவாகமங்களும், இம்மூலவாகமங்கள் வழித் தோன்றிய இருநூற்றேழு உபாகமங்களும், வேதத்தின் ஞான காண்டத்தை விரிக்கும் ஈசாவாசியம், கேனம், கடம், பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், ஐதரேயம், தைத்திரீயம், சாந்தோக்கியம், ஆதியஉபநிடதங்களும், வேதாகமங்களின் சாரத்தை ஒழுங்குதிரட்டித் திருஞான சம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர் நால்வராலும் அருளிச்செய்யப்பட்ட தேவார திருவாசகங்களாகிய தமிழ் வேதங்களும், வேதாகமங்களினதும் தேவார திருவாசகங்களினதும் சாரத்தின் சாரமாய் ஆகமங்களின் முரணறுத் தொற்றுமை காட்டற் கெழுந்த இரௌரவாகமத்து 73-வதுபாவவிமோசனபடலம் எனப்படும் ஞானபாதத்தாகிய பன்னிரு சூத்திர முடையதும் சிவபெருமானால் நந்தியந்தேவர்க்கும், அவரால் சனற்குமார முனிவர்க்கும், அவரால் சத்தியஞான தரிசனிகளுக்கும், அவரால் பரஞ்சோதி முனிவர்க்கும் முறையே அருளப்பட்டதும், பரஞ்சோதி முனிவர் ஆஞ்ஞைப்படி வடமொழியினின்று தமிழ்மொழிக்குச்சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய மெய்கண்ட தேவரால் மொழிபெயர்க்கப் பட்டதுமாகிய * சிவஞான போதமும் அதன் வழிப்பிறந்த சிவஞான சித்தி முதலிய பதின்மூன்று சைவ சித்தாந்த சாத்திரங்களும் பிறவுமாமென்க.

வேதம் என்னுஞ்சொல் அறிதற்கருவி எனப் பொருள்படும்; ஆகவே பதி பசு பாச மென்னும் முப்பொருள்களையும் அறிதற்குக் கருவியா யுள்ளது என்பது கருத்து. ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்ததுஎனப் பொருள்படும். அன்றியும் ஆ என்பது பாசமெனவும் க என்பது பசு எனவும் ம என்பது பதி எனவும் பொருள்படுமென்றும், ஆ என்பது சிவஞான மெனவும், க என்பது மோக்ஷமெனவும், ம என்பது மலநாசமெனவும் பொருள்படு மென்றும் ஆன்றோர் கூறுவர். வேதத்துக் கன்ம காண்டம் பதி பசு பாச வியலைச் சுருக்கியும் ஞானகாண்டம் விரித்துங் கூறும்.

இப் பெருந்துணைய நூற்பரப் பனைத்தும் எடுத்தோதிப் போந்த வற்றுள் சிறுச் சிறு பாகங்கள் மாத்திரமே சாமானிய அறிவுடையார்க்கு ஒருவாறுபுலப்பட ஏனைய பாகங்கள் மிக மயக்கிமலைவு செய்யா நிற்கும். உயிரினும் விழுமியதா யோம்பற்குரிய நல்லொழுக்கம் பூண்ட நன்மாணாக்கர் நல்லாசிரியரை முறைப்படி யடைந்து தொண்டு பூண்டொழுகிச் சோபான முறையிற் பல நூல்களையுஞ் செவ்விதின் ஆராய்ந்து அறிவைப் பெருக்கிப் பக்குவராய பின்னரே பதி பசு பாச ஞான நூல்களைக் கேட்டற்குரிய ராவர். கல்வியின்றிப் பக்குவராதலோ இயலாகாது.

இந்நிலவுலகின்கண்ணே செறிந்துள்ள ஐம்புல வுணர்வோடு நன்மை தீமைகளைப் பகுத்துணர வல்ல மனவுணர்ச்சியுமுடையராய் முதன்மை பெறு மக்கள் நன்குறுதற்கு வேண்டப்படுஞ் சவிகற்ப ஞானத்தைப் பயக்கும் வியஞ்சகஞான காரணமாய் விளங்குவது கல்வியாம். மக்கள் தமக்கு இயற்கையா யுள்ள மனக்கருவியினால் நிருவிகற்ப ஞானச் செய்தியும், செயற்கையான கல்வியறிவினால்

* 1. திருவுந்தியார், 2. திருக்களிற்றுப் படியார், 3. சிவஞானபோதம், 4. சிவஞானசித்தியார், 5. இருபாவிருபஃது, 6. உண்மைவிளக்கம், 7. சிவப்பிரகாசம், 8 திருவருட்பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப்பஃறொடை, 11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடுதூது, 13. உண்மைநெறி விளக்கம், 14. சங்கற்பநிராகரணம்.

சவிகற்பஞானச் செய்தியு மெய்துகின்றார். நிருவிகற்பக் காட்சியாவது பெயர், சாதி, குணம், கன்மம், பொருளென்றிவற்றாற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்று நின்றதெனப் பொருளுண்மை மாத்திரையே அறியும் ஞானசத்தி. சவிகற்பக் காட்சியாவது, பெயர் சாதி முதலியவற்றாற் பொருளை யுள்ளவா றுணரு ஞானசத்தி. இச்சத்தியை அபிவிர்த்தியாக்கி, உடலுட னழியுஞ் சாதி முதலியன போன்றழியாமல், உயிருடன்செல்லுந் தரத்தினதாகிய கல்வியின் மாட்சியை,

"இம்மை பயக்குமா லீயக்குறைவின்றால், தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால், எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன், மம்ம ரறுக்கு மருந்து."

"அறம்பொரு ளின்பமும் வீடும்பயக்கும், புறங்கடை நல்லிசையு நாட்டும்—முறுங்கவலொன், றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச், சிற்றுயிர்க் குற்ற துணை."

என்றின்ன பல ஆன்றோர் கூறியவற்றானு முணர்க.

நன்மாணுக்கர் இயல்புகூறின், ஆசிரியன் கற்பிக்கு நூற்பொருளைக் கற்பித்தவாறுணர்தலும், கற்பித்த பொருள் பற்றுகக்கொண்டு சூழ்ந்து வேறு நற்பொருளுணர்தலும், தம்போலக் கற்பவர்க்குபகாரிக ளாதலும், தந்தைதாய் ஆசிரியர் முதலியோர் செய்நன்றிபறிதலும் தீயசிற்றினச் சார்பின்மையும், சோம்பு, தடுமாற்றம், மானம், மறவி, கடுநோய், வெகுளி, களவு, காமம் என்றிவை யிலராதலும், ஆசிரியனை யடைந்து வழிபடுதலும், தருமநெறி தவறாமையும், ஆசிரியன் குறிப்பறிந்தொழுகுதலும், கேட்ட நூற்பொருளைச் சிந்தித்தலும், பாடத்தை மறவாமற் காத்தலும், மீட்டுமாசிரியனையடைந்து கேட்ட நூற் பொருளை ஐயவிபரீதங்கள் நீங்க வினவுதலும், நூற்பயிற்சி யுடையார் பிறர் அறிந்ததல் அறியாதாதல் ஐயமுற்றுதல் வினவுஞ் சொற்பொருள் வினாக்களுக்கு அவர் கொள்ளுமுறையான் விடையிறுத்தலும், நூற்பொருள்களைக் கற்றோ ரவையில் அவ ரனுமதி கொண்டெடுத்துப் பிரசங்கித்தலு முடையராகி உலக நடை யறிந்தொழுகுவோர் நூல் கற்றற்குரிய நன்மாணுக்க ராவர்.

நல்லாசிரியர்யாவரெனில், உயர்குடிப் பிறப்பும், மனத்தூய்மையும், நல்லொழுக்கமும், பலகலைப் பயிற்சியும், வாய்மையும், மாணுக்கர்மாட் டன்புடைமையும், பொருளவாவின்மையும், நடுவிகிலைமையுமென்னு மெண்வகை யிலக்கணங்களுடையராய்க், கொடையும், ஊக்கமும், உலகிய லறிவும், நிலைபெற்ற தோற்றமும், பொறையும், நிறையும், மறப்பின்மையும், அறிவும், உருநலனும், ஆற்றலும், புகழும், சொல்வன்மையும், மாணுக்கரால் விரும்பப்படு நீர்மையும் தொன்னெறியாற் பொருந்தினோர் கற்பிக்கும் நல்லாசிரிய ராதற்குரிய ரென்றறிக.

நல்லாசிரியரைக்கண்டடைந்து விதிப்படி வித்தியாரம்பஞ்செய்து தண்டமிழ்க்கலைகளைக் கற்கப்புகு நன்மாணுக்கர் முன்னர்த் தமிழ் நெடுங் கணக்கோதி எழுத்திணைத்துச் சொல்லாக்கவும் சொற்றொடுத்து வாசிக்கவும் பயின்றபின்னர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், நன்னுரை, நல்வழி, நன்னெறி முதலிய நீதி நூல்களைக் கிரமமாகக் கற்றுப் பொருளுணர்ந்து கொள்ளவேண்டும். அதன்பின்னர்திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி முதலிய நிகண்டுகளைக் கற்று அவை கூறுஞ் சொற்பொரு ளுணர்ந்து, நாலடி, ஆசாரக் கோவை, முதுமொழி வெண்பா, நீதிநெறி விளக்கம் ஆகிய நீதி நூல்களைக் கற்று அவற்றின் பொருளையும் அவற்றின்கண்வரு நிகண்டுச் சொற்களையுந் தெளிந்துகொள்ள வேண்டும். அப்பால் வைதிக சைவ சாத்திரங்க ளோதுதற்கு வேண்டிய சைவ தீக்ஷையை விதிப்படி பெற்றுப் பஞ்சாக்கர அட்டாக்கர மந்திர செப வனுட்டான முடையராய்த் தேவார திருவாசக மாதிய தமிழ்வேதங்களைப் பண்முறைபோதப் பயின்றுகொள்ள வேண்டும். (தொடரும்.)

ச. பூபால பிள்ளை.

சரித்திரப் பக்கம்

இயற்பகை நாயனார்

1. சோழ மண்டலத்திலே காவிரிப் பூம் பட்டினத்திலே வைசியர் குலத்திலே குருலிங்க பக்தியிற் சிறந்தவரும் உதாரகுணம் உள்ளவரும் ஆகிய இயற்பகையா ரென்பவ ரொருவர் இருந்தனர். அவர் இல்லறத்தி லிருந்து சிவபக்தர்களுக்கு அவர்கள்விரும்பிய பொருள் யாதாயினும் இல்லையென்னாது மகிழ்ச்சியோடு கொடுத்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருநாள் ஸ்ரீ சிவபிரான் இவர் செய்யுந் திருத்தொண்டை சகலருக்கும் புலப்படுத்த வேண்டி ஒரு பிராம்மண வடிவங்கொண்டு விபூதி திருமேனியில் பிரகாசிக்க விட புருஷ வேடந் தரித்து அவர் வீட்டிற் கெழுந்தருளினர். இயற்பகையார் அன்போடு அவரை எதிர்கொண்டழைத்து விதிப்படி அருச்சித்து வந்த காரணம் யாதென வினவினார். ஐயர் இயற்பகையாரை நோக்கி, "சிவனடியார்கள் விரும்பிக்கேட்பன யாவையெனினும் நீர் அவைகளை மறாமல் மகிழ்ச்சியோடு கொடுப்பதாகக் கேள்வியுற்று உம்மிடம் வந்தேன். நீர் தருதற்கு இசைவீராயின் அந்தப் பொருள் இன்னது என்று சொல்வேன்" என்றார். அதற்கு இயற் பகையார் "இதைக் குறித்துத் தேவரீர் சந்தேகிக்க வேண்டுவதில்லை. திருவுளம்விரும்பியதை இன்னதுஎன்று திருவாய் மலர்ந்தருளும்" என்று சொல்ல ஐயர் "உம்முடைய மனைவியை விரும்பி வந்தேன்" என்றார்.

2. அப்பொழுது இயற்பகையார்முன்னையிலும் பார்க்க மிகமகிழ்ந்து வணங்கி நின்று, "சுவாமி! தேவரீர் அடியேனிடத்தில் உள்ள பொருளையே விரும்பிக் கேட்டது அடியேனுடைய பாக்கியம்" என்று சொல்லி, உள்ளே போய் கற்பிலே சிறந்த தம் மனைவியை நோக்கி, "நான் இன்றைக்கு உன்னை இச்சிவனடியாருக்குக் கொடுத்து விட்டேன்" என்றனர். உடனே மனைவியார் மனங் கலங்கிப் பின்னே தெளிந்து, நாயகன் கட்டளையின்படி நடக்க, எண்ணங்கொண்டு, அங்குவந்த அவ்வய்யருடையபாதங்களிலே நமஸ்கரித்து நின்றார். அதுகண்ட இயற்பகைநாயனார் மனமகிழ்ந்து "இன்னும் அடியேன் செய்ய வேண்டிய பணி யாது" என்றுசொல்ல, ஐயர் "இந்தப் பெண்ணை நான் தனியே கொண்டு போகும் வரைக்கும் உங்கள் பந்து ஜனங்களால் எனக்கு ஓர் இடையூறும் உண்டாகாவண்ணம் நீ துணையாக வரவேண்டும்" என்றனர். அதைக்கேட்டு இயற்பகையார் "இக்குற்றேவலை நானே செய்யாமல் இவர்சொல்லும் வரைக்கும்தாழ்ந்து நின்றது குற்றம்" என்று நினைத்து துக்கித்து, பின்பு, போர்க்கோலங் கொண்டு, அவரைவணங்கி, அவரையும் மனைவியாரையும் முன் போம்படி செய்து, தாம் பின்னே போயினர்.

3. அப்பொழுது இயற்பகைநாயனாருடைய சுற்றத்தவர்களும், அவர் மனைவியாருடைய சுற்றத்தவர்களும், இயற்பகை பைத்தியத்தினாலே தன் மனைவியைக் கொடுத்தானாயினும், அவளை ஒருவன் கொண்டுபோவது நியாயமா? என்று தங்கள் மரபுக்கு வரும் பெரும் பழியை நீக்கிக் கொள்ளும்பொருட்டு அவர்களைத் தொடரக் கருதி, ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, ஐயருக்கு பக்கத்தில் நெருங்கி அவரை வளைத்துக் கொண்டனர். ஐயர் அதைக் கண்டு அஞ்சினவர் போல இயற்பகை நாயனாருடைய மனைவியாரைப் பார்க்க அம் மனைவியார், "சுவாமி நீர் பயப்படவேண்டாம், இயற்பகையார் அவர்களை வெல்லுவார்" என்றனர். இயற்பகை நாயனார் அதைக் கேட்டு "அடியேன் அவர்கள் எல்லோரையும் இப்போது கொன்று போடுகிறேன், தேவரீர் சற்றும் அஞ்சவேண்டாம்." என்று சொல்லி அங்குவந்த சுற்றத்தார்களைப் பார்த்து "நீங்கள் என் வாளுக்கு இரையாவீர்கள். ஒருவரும் எனக்கு எதிர் நில்லாமல் ஓடிப்பிழையுங்கள்" எடா இயற்பகை ! நீ என்ன காரியஞ் செய்தாய்? ஊரார்கள் பேசும் பழி

மொழிக்கும், எங்கள்சத்துருக்கள் நகைக்கும் நகைப்புக்கும் நீ வெட்கப் படவில்லை. மனைவியாரைப் பிராமணனுக்குக் கொடுத்தோ நீ சாமர்த்தியம்பேசுவது. நாமெல்லோரும் செத்தாலும் சாவோம் மொழிய இந்தப் பெண்ணைப் பிராமணனுக்குக் கொடுக்கோம்" என்றார்கள். உடனே இயற்பகையார் கோபங்கொண்டு அவர்களை எதிர்க்க அவர்கள்இவரைவிட்டுவிட்டுஐயரைப்போய்த் தடுத்தார்கள். அதுகண்டநாயனார் அதிகக் கோபங்கொண்டு வாளினுலே அவர்களுடையஅவயவங்களைத்துணித்து விழுத்தி, பின்பு எதிர்த்துவந்த ஒவ்வொருவரையுங் கொன்று, பின்பு ஐயரை நோக்கி "சுவாமி! தேவரீர் அஞ்சாவண்ணம் இந்தக் காட்டைக் கடக்கும் வரைக்கும் வருகிறேன்" என்றுசொல்லி அவரோடு போயினர். திருச்சாய்க்காடு என்னும் சிவஸ்தலத்துக்குச் சமீபத்தில் போனபொழுது, ஐயர் நாயனாரை நோக்கி "இனி நீர்திரும்பிப்போகலாம்" என்று சொல்ல, நாயனார் அவருடைய திருவடிக் கமலங்களை வணங்கி அஞ்சலி செய்து ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டு திரும்பினர். அப்பொழுது ஐயர் "இயற்பகையே இங்கே வா" என்று ஓலமிட்டார். நாயனார் அவ்வோசையைக் கேட்டு, "அடியேன்வந்துவிட்டேன், வந்துவிட்டேன், இன்னும் இடையூறு செய்பவர்கள் உண்டாயின், கொன்று போடுவேன்" என்று சொல்லிக் கொண்டு வர, ஐயர் மறைந்தருளினர்.

4. வந்த நாயனார் அவ்வையரைக் காணமல் மனைவியாரை மாத்திரங் கண்டார். பின்பு ஆகாயத்திலே பார்வதி சமேதராய் இடப வாகனத்தில் எழுந்தருளி வந்த கைலாச பதியைக் கண்டார். ஆராமையினுலே உடனே விழுந்தார்; எழுந்து ஸ்தோத்திரம் பண்ணினர். சுவாமி அவரை நோக்கி "நம்மேலும் நம்முடைய அடியார் மேலும் நிஷ்களங்கமான அன்பு வைத்த இயற்பகையே! நீ உன் மனைவியோடு நம்முடனே வா" என்று சொல்லி மறைந்தனர். இயற்பகை நாயனாரும் மனைவியாரும் யுத்தத்திலே இறந்த அவர்கள் பந்துக்களும் சிவலோகத்தை அடைந்து மோக்ஷானந்தத்தை அநுபவித்தனர்.

5. இயற்பகைநாயனார் தன்னிடத்திலுள்ள அன்பு மிகுதியால் எத்தகைய நற்பதவி யடைந்தார். அவர் தன்னுடைய திருவாக்கை மீறி நடக்காமல், எவ்வளவோ இடையூறுகள் நேரிட்டும் கொஞ்சமாவது மனஞ் சலித்தாரா? இல்லை.. அவர் தமதுமனைவியைப்பறிகொடுத்துப் பிறர் கொண்டுபோகும்படி விட்டு வைக்கும் பலஹீனரா? இல்லை. பந்துக்களை வரையும் சண்டையில் கொன்றவர் எவ்வளவு பலமுள்ளவரா யிருக்கவேண்டும். ஆதலால் நாம் ஒவ்வொருவரும் அன்னவர் நன்னடக்கைகளை கைக்கொண்டு நடக்க முயற்சிக்கவும், பிறரை முயற்சி செய்ய செய்விக்கவும் வேண்டும். அவருடைய மனைவியார் கற்புவாய்ந்த மங்கை யென்று அன்னவள் நடக்கையினுல் தெரிகின்றதல்லவா? அவள் புருஷனே தெய்வமென்றும், அன்னவருடைய வாக்கை தேவ வாக்கென்றும் மதித்துப்பணிந்து நடந்தாள். கற்பரசி என்றல் இவளன்றோ கற்பரசி. பின்பு அவ்வைசிய குலத் தலைவர்கள் தங்கள் குலத்திற்குவந்த ஹானியைப்போக்குவதற்குத் தங்களுடைய உயிர்களைக்கொடுத்தார்கள். அம்மாதிரியே ஒவ்வொருவரும் தங்கள் குலத்திற்குவந்த ஹானியை தமக்கு வந்ததாகவே கருதவேண்டும். இயற்பகை நாயனார் தம்பிரியபத்னியை, தான் கைக்கொண்ட விரதத்தைக் காத்துக்கொள்ள தானஞ் செய்தார். அவ்வம்மையாரும் நடக்கக்கூடாத காரியத்தைக்கூட கற்புக்குப் பங்கம் வராதபடி நடந்து பாதுகாத்தாள். அக்குலத்தலைவர் குல ஹானிக்காக அரிய உயிர்களைக் கொடுத்தனர். இக்காரணங்களால் இவர்களைக் கருணைக் கடலாகிய சிவபிரான் தமது திருவடியில் சேர்த்தருளினர். இச்சிறு கதையால் உண்மையானபக்தி இன்னதென்றும், அப்பக்தியை யுடையவர்கள் அடைந்த முக்தி நிலை யின்னதென்றும் அறியக்கிடக்கிறது.

பி. எஸ். குமர வடிவேல்

விவசாய விருத்திக்கு வழி

இக்காலத்தில் நமது நாட்டில் போதிய உணவுப்பொருள் கிடைக்காமையால் ஜனங்கள் படுங்கஷ்டத்தை எழுதி முடியாது. சமீபத்தில் நடந்த சண்டையால் பலவித கஷ்டங்களும் இப்பஞ்சத்தோற்றமும் உண்டாயிருக்கின்றதென எல்லோரும் இக்காலத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதன் காரணத்தை நமது ஜனங்கள் தீர்க்கமாக ஆராய்ச்சி செய்ததில்லை. இந்த அகவிலை ஏற்றம் எவ்வளவு காலமாக இருந்து வருகின்றதென்பதை நாம் கவனித்து அதன் காரணத்தையும் கவனித்தால் இதன் உண்மை நன்றாய்த் தெரிந்துவிடும். அகவிலை ஏற்றம் திடீரென்று இச் சண்டைகளில ஏற்பட்டதில்லை. சுமார் 55-வருஷகாலமாகக் கொஞ்சங் கொஞ்சமாக விலை ஏறிக்கொண்டேவருகின்றன. ஏன ? 1888-ம் வருஷத்தில் விவசாய விஷயத்தைப்பற்றி விசாரணை செய்ய ஒரு கமிஷன் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டது. அதில் ராய் கங்காராம் பகதூர் என்ற கனவான் விவசாய நிலைமையைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "நம்முடைய தேசத்தில் விலை பொருள்கள் ஒவ்வொரு வருஷமும் போதுமான அளவு விளைந்து அறுவடை செய்யப்பட்டபோதிலும், மறு வருஷத்தில் வெள்ளாமை குறைந்து போனால் அதற்கு ஈடுசெய்யப் போதுமான தானியங்கள் இத்தேசத்தில் கிடையாது" என்று கூறியிருக்கிறார். மற்ற நாடுகளைக் காட்டிலும் ஏராளமாக ஆகாரப் பொருள்களை விளைவிக்கக் கூடிய நிலம் நமது நாட்டில் போதுமானதிருந்தும் விளைபொருள் குறைந்துபோவதின் காரணம் இத்தேச விவசாய முறை சீர்திருத்தப்படாமையே என்பதிற் சந்தேகமேயில்லை.

நம்முடைய தேசத்தைவிட மற்ற தேசங்களிலெல்லாம் விவசாயம் சீர்திருத்தம் பெற்று புதியமுறைகளுடன் செய்யப்பட்டு வருவதால் நம்முடைய விளைச்சலைவிடப் பன்மடங்கு அதிக விளைவு மற்ற நாடுகளில் ஏற்பட்டிருக்கின்றது. ஜப்பானில் ஒரு ஏகராவில் விளையும் நெல்லில் பாதியே இத்தேச பூமிகளில் விளைகின்றது. இவ்விதமே அயல் நாடுகளில் ஒவ்வொரு தானியமும் நமது தேசத்தைவிட அதிகமாகவே சாகுபடியாகி வருகின்றது. ஏனென்றால் பிறநாடுகளில் விவசாயக் கல்விச்சாலைகளை அரசாங்கத்தார் ஏற்படுத்திப் பணத்தைஏராளமாகச் செலவிட்டுக் கிராமத்தில் பயிரிடுவோர்களுக்கு விவசாயக் கல்வியைக் கற்பித்து வருகின்றார்கள். 1880-ம் வருஷத்தில் விவசாயம் நமது நாட்டிலிருந்த நிலைமையைப் பார்த்து பஞ்ச விஷய விசாரணைசபையார் பயிர்க்குடிகள் விவசாய அபிவிருத்தி விஷயத்தில் சிரத்தை கொண்டு அதைச் சீர்திருத்தம் செய்தாலொழிய இந்தியாவில் விவசாய முன்னேற்றத்தை நாம் எதிர்பார்க்கவேமுடியாது என்று கூறியிருக்கிறார். உண்மையாகக்கிராமங்களிலுள்ள பயிர்க்குடிகள் விவசாயத்தில் விருத்தி பெறவேண்டுமானால் விவசாயக்கல்வியை விருத்தி செய்யவேண்டியதவசியம். விவசாயம் சம்பந்தமான விஷயங்களை மாணாக்கர்களுக்குக் கற்பித்தால்மட்டும் போதாது ஒவ்வொரு கிராமத்திலும் விவசாய பாடசாலைகளை ஏற்படுத்தி அப்பாடசாலையின்கீழ் மாதிரிப் பண்ணைகள் வைத்து மாணவர்களுக்குப் புதியமுறையில் அநுபவமாகப் பயிர் செய்யக்கூடிய வேலை செய்யச் சொல்லியும் சிறு பிராயமுதல் பயிற்சி செய்யவேண்டும். பிறகு சாஸ்திரீகமான விவசாய முறைகளை அநுபவத்துடன் போதித்துக்காட்டப் பிரத்தியக விவசாயக் கல்விச் சாலைகள் பல ஏற்படவேண்டும். அயல் நாட்டார் இங்ஙனஞ் செய்துபார்த்ததில் விவ

சாய விஷயமாகத் தாங்கள் செலவிடும் தொகையில் ஒன்றிற்கு நூறு பங்கு இலாபம் சம்பாதிக்கலாமென்று நன்றாய் அறிந்துகொண்டு விட்டார்கள். ஐரோப்பாவி லுள்ள எல்லாத் தேசத்தார்களும் 1896-ம் வருஷத்தில் ரீஸெல கமிட்டி என்றதோர் கமிட்டி ஏற்படுத்தித் தேசக் கைத்தொழில் விவசாயம் இவைகளை விருத்தி செய்துகொண்டார்கள். இக்காலத்தில் அமெரிக்காதேசமும் ஜப்பான் தேசமும் விவசாயத்தில் விருத்தியாகித் தலை சிறந்து விளங்கி வருகின்றன. ஜப்பானில் பயிர்த் தொழில் விருத்தியும், தொழிலாளிகள் மேம்பாடும் எங்ஙனம் விவசாயக்கல்விமூலமாகச் சீக்கிரம் விருத்திபெற்றதென்ற விஷயமாக ஸர் பிரிடரிக் நிக்கல்ஸன்என்பார் தாம் எழுதிய "ஜப்பானின் பயிர்த்தொழிலைப் பற்றிய குறிப்பு" என்ற புத்தகத்தை ஒவ்வொரு இந்தியரும் படிக்கவேண்டியது அவசியமாகும். டென்மார்க்கில் பயிர்த் தொழில் சங்க அக்ராசனர் எம். மாரே ஆயின்ஸ் என்பவரும், பெல்ஜிய விவசாய மந்திரியும், பிரஞ்சு விவசாய சாஸ்திரி மிஸ்டர் டிஸ்ஸிரண்டும், அவ்வரசர்கள் தேச விவசாய விஷயத்தில் செய்திருக்கும் சீர்திருத்தங்களையும், கோப்பன் ஹேகனிலிருந்து பிரிட்டிஷ் கான்ஸல் பயிர்த்தொழில்சாஸ்திரக் கல்வியைப்பற்றி டென்மார்க் விவசாய விசாரணை சபையாருக்கு எழுதியிருக்கு மறிக்கையையும் படித்துப் பார்த்தால் நமது தேசத்தில் விவசாயத்தை எவ்வழியில் விருத்திசெய்துகொள்ளலாமென்பது தெரியவரும்.

காட்டிலாகா மூலியமாக விவசாய விருத்திக்குச் செய்யக்கூடிய காரியம் பல உள. அவைகள் நம் தேசத்தில் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. பஞ்சாப் மாகாணத்தில் காட்டிலாகாதார் காடுகளில் வீணாய்ப் போகிற ஜலத்தைக்கொண்டு 40-ஆயிரம் ஏகர் நிலங்களைச் சாகுபடி செய்திருக்கின்றார்களென்று தெரியவருகிறது. அங்ஙனம் பிரமாகாணக் காட்டிலாகாதார் ஏன் கவனிக்கலாகாது. கால் நடைகளின் மேய்ச்சற்கு வேண்டிய புல்தரைகள், விறகுகள் இவைகளைக் காட்டிலாகாதார் குடிகளுக்குப்பிரத்தியேகமாகக் காடையடுத்தகிராமத்தாரின் உதவிக்காக ஏன் ஏற்படுத்தலாகாது? இவ்விஷயங்களை அவசியம் கவனிக்க வேண்டுமென்று டாக்டர் வால்கர் என்போரும் மற்றுஞ் சிலரும் நமதுஅரசாங்கத்திற்குச் செய்த சிபார்சு பயன் பெறுமற் போனதற்கு நாம் விசனிக்க வேண்டி யிருக்கின்றது.

இந்தியாவில் பயிர்த் தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய பொருளுதவி கிடைப்பதில்லை. புதிய நிலங்களைச் செப்பனிட்டுப் பயிரிட விரும்புவோருக்கு நிலம் வாங்கவும் விவசாயக் கருவிகள் வாங்கவும் கழனிகள் பண்படுத்தவும் வேண்டிய செலவுகளுக்கு அரசாங்கத்தார் விவசாய பாங்குகள் ஏற்படுத்தி அதன் மூலமாக 50 வருஷத்தில் திருப்பிக்கொடுக்கக்கூடிய நிரந்தரக் கடன்கள் கொடுத்து உதவிசெய்யவேண்டும். விவசாயிகளுக்கு அந்தந்த வருஷம் விவசாயச் செலவிற்கு மகசூல் கடன்கள் சில்லரையாகக் கொடுத்து எருக்கள் சேகரிக்கவும், விதைகள் வாங்கவும் வேண்டிய உதவிசெய்யவேண்டும். நல்ல விதைகள் சாஸ்திரீய உரங்கள், விவசாயக் கருவிகள் முதலியவைகளைச் சேகரித்து விவசாயிகளுக்கு உதவ விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் ஸ்தாபிக்கப்படவேண்டும். இவ்வித உதவிகளை அரசாங்கத்தார் விவசாயிகளுக்குச் செய்ய முன் வரவேண்டுமென்று 1882-ம் வருஷத்தில் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் நமது அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கிறார்கள். இவ்வண்ணம் அரசாங்கத்தார் பொருளுதவி செய்தும், விவசாயக் கல்வியைப் புதிய முறையில் திருத்திப் போதித்தும் பாராவிடில் நமது தேச விவசாயம் விருத்தி யாகாதென்பது நிச்சயம்.

A. வேங்கடவரதாச்சாரியார்.

பெண்கள் பக்கம்

சந்திரமதி

1. உபோற்காதம்.

பொய்யாமை பொய்யாமையாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

என்பது பொய்யா மொழி. ஸத்தியாந் நாஸ்தி பரோதர்ம: என்பது வேத வாக்கு. உண்மையிற் சிறந்த தொன்றுமில்லை. ஸ்வயநலத்தைத் தருமம் என்னும் மஹாயாகத்தில் பலியிட்டு அவ் வேள்விச்சுடருள் வரும் தெய்விகத்தைப் பெறுவதே உண்மையின் பெருமையாகும். அதுவே அன்பின் ஸ்வரூபமுமாம். வேறேது அன்பெனப்படும்? இவ்வன்பு ஹ்ருதயத்துள் வசிக்கும்; மனத்தை யுருக்கும்; யாவர்க்கும் உதவி செயச் செய்யும். அது இருவகைப்பட்ட சத்தியெனச் சொல்லலாம். ஒன்று ஆக்குந் தன்மையது; மற்றொன்று போக்குந் தன்மையது. கீழ்மையை அறப் போக்கி மேன்மை உண்டாக்குவதே அதன் ஸ்வபாவம் என்று நிச்சயமாகக் கூறலாம். எனினும், இவ்விரண்டு சத்தியும் ஒன்றை விட்டு ஒன்று இருக்கமுடியாது. ஸூர்யனும் பிரகாசமும்போல் அது விளங்கும். ஸூர்யன் இருக்கும் இடமெல்லாம் உஷ்ண தாபமும் ஒளிப் பிரதாபமும் இருந்து கொண்டுதான் இருக்கும். மேலும், மின்தாதுவைப்போல அன்பின் பெருக்கிலும் ரௌத்திரமும் சாந்தமும் இணைந்து கண்ணிற்கு எளிதிற் புலப்படாதுவிளங்கும். அவ்விரண்டு சக்தியும் தனியே விளங்கிச் சேருமிடத்துப் பேரானந்த ஜோதிதோன்றி யாவர் மனத்தையு மயக்கி அவரைப் பரவசமடையச் செய்யும். அச்சோதியைச் சுற்றிவிளங்கும் பரிவேஷமே சத்திய மெனக் கூறுதல் இழுக்காகாது. அதுவும் மேல் தங்கு தடையில்லாமல் பெய்யும் கருணாவர்ஷத்தின் முற்குறி யெனினும் தவறாகாது. ஸத்திய பரிவேஷத்தால் கவரப்பட்ட இச்சையற்ற ஆத்மா இவ்வுலகங் கடந்த சுகத்தைப் பெறுமென்பது திண்ணம். அதனா லன்றோ அறம்பிற செய்யாமை நன்றென்றார் வள்ளுவனாரும். ஆகவே அவ் வாய்மையைப் பெற்றோர் அடையாத தொன்றில்லை; அதை மறைந்தார் அடையும் கேட்டைக்காட்டிலும் வேறு கேடு கிடையாது. சிறப்பு மிக்க இவ் வாய்மை விரதம் பிறவிப் பயனைத் தந்து பேரின்பச் சுகத்தையுந் தரும். அதற்குச் சந்திரமதி ஹரிஸ்சந்திரன் இவரது சரிதமே நிதர்சனம். அவ்விருவரது வாழ்க்கை வழியைச் சற்றே கவனித்து நமது மனத்தையும் உண்மைவழியில் தடைப்படாது ஓடத் தூண்டுவதே நமக்கு நலம் பயக்கு மல்லவா?

2. நாடு.

கன்னிகையைப் பெற்றானைக் கண்டு மண
மொழிந்து, பின்னரவன் பேசுகிற மேல்
லாங்கேட் - டென்னிடையே, மீண்டு மெ
ழுந்தருளல் வேண்டு மெனவினிமை, பூண்
டுரையாற் சொற்றான் புகழ்ந்து.

அந்நாடு நன்னாடு; அருள்பெற்ற கோசலமென்னும் பேர் புனைந்த திருநாடு; சூரியவம்சத்து அரசர்கள் ஆண்டு இவ் விந்தியநாட்டின் துயரத்தைப் போக்கி அன்பு செழித்த பெருநாடு; எல்லா வளமும் குலவப்பெற்ற குறையற்றநாடு; இணையற்றநாடு; சரயூநதி தவழ்ந்து முத்தெரிக்கு முதல் நாடு; 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது' யாரிடமும் கருணை பொழிந்து ஆளும் என்னையன் இராமனாண்ட அழகுற்ற நாடு. அதன் அழகும் பெருமையும் வாக்கினால் அளக்க முடியவே முடியாது. அந்நாட்டின் காடு மலை தோறும் தோன்றும் மரங்களின் வளமை ஆகாயத்தையேதொடர்ந்திருந்ததெனலாம். அப் பிராந்தியங்க ளெங்கும் மதத்துடன் ஓடுமாறு,

"ஆரங் குளவஞ்சி அசோகு பலாசந்
தேவ, தாரம் வகுளம்கடுச் சண்பகஞ்
சாதிகன்னி, காரஞ் சுரபுன்னை கடம்பு
கர்ச்சூரம் வேயகர்ப், பூரம் பனையோடு
புரண்டிடப் போயதன்றே!"

பல பழமரங்களும் மரவினங்களும் பூக்கொடிகளும் செடிகளும் அளவற்றுக் கீழ் உதிர்ந்த பூக்களையும் காய்களையும் பழங்களையும், அவற்றிலிருந்து மேல் வழிந்துவரும் தேன்பெருக்கும், வாசனைக்கூட்டமும் உலகமுழுதும் உறைக்கும். அந்நாட்டின் அரசர்கள் வயல்களின் வளப்பத்திற்கெனக் கட்டிய தடாகங்கள் ஏறிகள் பாசனக்கால்கள் இவற்றிலெல்லாம் மீன்கள் குதித்துப் பக்கத்திலிருக்கும் பாக்குமரங்களின் பளைகளைத் தம்மினமோ என்று சந்தேகித்து, அவற்றைத் தழுவி அங்குத் தோன்று முத்துக்களைக் கௌவிக்கொண்டு தம்மிடம் அடையும். மேலும் அவ்வயல்களில் உடம்பு தெரியாமல் அலையும் எருமைகள் இவ்வுலகையே மறந்தன.

"சாயெ லாம்பரு வற்செழுஞ் சாலி
யின், காயெ லாந்தின்று கன்னற்ப
டைப்பையுள், மேய லாவிள மேதிக
ளின்கடை, வாயெ லாமுத்து மாலைகள்
நாலுமே!"

இவ்வழகிய திருநாட்டின் விளங்கிய மக்களது அருமை பெருமையைப் பாராட்டிச் சொல்வது எளிதல்ல. அந் நாட்டில் எளிமையில்லை ஏழ்மையில்லாமையால்; அறிந்தவன் இல்லை அறியாமையில்லாமையால்; அறம் என்பதே கிடையாது அதர்மமில்லாமையால்; தண்டனையே கிடையாது குற்றமென்பதில்லாமையால்: இவ்வதிசயமான நாட்டின் தலைநகராகப் பெற்றஅயோத்திமாநகரம், கோட்டை,
யகழி முதலிய காவலுறுப்புக்களும்,
மாடமாளிகை யும்மடப்பள்ளியும்,
கூட கோபுர மும்பெருங் கோயிலும்
ஆட ரங்கு மணியறச் சாலையும்
பாட லஞ்சிகரி வைசிய பந்தியும்
இவை முதலான நகரத்து அங்கங்களும் தவழ்ந்து விளங்கியது. அந் நகரத்து ஜனங்கள் கல்வியாற்செல்வத்தால் நிறைந்திருந்தும், தம்மைக் காட்டினும்எளிய நிலையுள்ளவர்களுக்கு அன்னமிட்டு உண்ணவேண்டுமென்ற அவாவைப் பூர்த்தி செய்யாமல் என்றும் உள்ளமழிந்தனரே அன்றி, மற்றெந்த விதத்திலும் அவர் சிறிதும் ஏக்கமடைந்தவரல்லர். அவரனைவரும் தருமமே குடிகொண்ட சிந்தையர்; கருமமே கவனித்த கண்ணினர் வலிமையேகூடிய தோளினர். இவ்வளவு சிறப்புவாய்ந்த அத் திருநகரத்துச் சில அதிசயங்கள் எங்கும் காண முடியாதிருந்தன. அவற்றுள் முக்கியமாகஅங்கு,

நிறையுந்தாமரை நீட்டத் தினப்புனல
சிறையு மன்றிச் சிறைபிறி தில்லையாற்
பிறையு மென்முலைப் பேதையர் சிற்றி
டைக், குறையு மன்றி குறை பிறி தில்
லையால்.

இவ்வாறு இணையற்ற அதிசயங்கள் குலவ விளங்கிய அத்திருநாடு நெடுநாளாகச் சூர்ய வம்சத்துள் தோன்றி உலகமுழுதும் பெருங்கீர்த்தியோடு விளங்கிய வீரமன்னர்களால் ஆளப்பட்டுவந்தது. குடிகளை ஆள்வதே குலதர்மமாகக் கொண்ட அம்மன்னர் வம்சம் தொன்றுதொட்டே குடிகளது பிழைப்பே தமது பிழைப்பென எண்ணிப் பேசுவதல்லாமல் தமது செயலாலும் நடையாலும் விளக்கி வந்தனர். ஸத்யத்தையே தருமமாகக்கொண்ட அம் மன்னர் வம்சம், அவரது குலமுதல்வன் இருளை ஒழித்து ஒளிகொடுத்துச் சுகந்தருவதுபோலவே நாட்டின் பயத்தை ஒழித்து, நயத்தை அளித்து, துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்துவந்தனர். அவரது நடுநிலைமைக்கும் மனோ தைர்யத்துக்குஞ் சிபியரசரே சாட்சியம்; அவரது பெருமுயற்சிக்கு பகீரதனே சான்று அவர் போலும் அநந்த மன்னர் தோன்றிய அச்சூரிய வம்சத் திலகத்திற்பதித்த நடுநாயகமாக விளங்கவே ஹரிச்சந்திரன் என்னும் அரசர்பெருமான் அவதரித்து விளங்கினான். அவனது குணம் ஒழுக்கம் செயல் இவற்றின் பெருமையை விரித்தல் மிகை. மற்றவனது வீரப்பிரதாபத்தைக் கூறச் சொல்லுக்குச்சாரமில்லை ஈரமற்ற நெஞ்சர் எவரேனும் அம்மன்னன் எதிர்வந்தாலும் போதும்.

(தொடரும்.)

வி. சேஷகிரி சாஸ்திரி, பி. எ.

பெருந்தேவனார் பாரதம்

இது பெருந்தேவனாரது பாரதம் என்றும். இது செய்யுட்கிழமைப் பொருளதாகிய ஆறன்றொகை நிலைத் தொடர். செய்யுட்கிழமைப் பொருளாவது ஒருவர் நூலுக்குரிமை யுடையவரா யிருக்கும் பொருள், கிழமை, உரிமை, சொந்தம் என்பன ஒரு பொருட் சொற்கள். அது நூலைப் பாடிய உரிமை யுடையவராயிருத்தலும், நூலிற் சொல்லப்படுந் தலைவரா யிருக்கும் உரிமை யுடையவராயிருத்தலுமென இருவகையினதாம்.

கபில ரகவ லென்பது விரியுங்கால், கபிலரதகவல் என விரியுமேனும் கபிலராற் பாடப்பட்ட அகவல்என்னும்பொருள்பட நிற்றலால், அது நூலை யியற்றிய உரிமை யுடையவரா யிருத்தலைக் குறிக்குஞ் செய்யுட் கிழமையாம்.

சடகோப ரந்தாதி என்பது சடகோபரது அந்தாதி யென விரியுமேனும் சடகோபர்மீது பாடிய அந்தாதி என்னும் பொருள்பட நிற்றலால் அது நூலிற் சொல்லப்படுந் தலைவரா யிருத்தலைக் குறிக்குஞ் செய்யுட் கிழமையாம்.

அவற்றுள் பெருந் தேவனார் பாரதம் என்பது பெருந் தேவனாராற் பாடப்பட்ட பாரதம் என்னும் பொருள்பட நிற்றலால், நூலையியற்றிய உரிமையுடையவரா யிருத்தலைக் குறிக்குஞ் செய்யுட் கிழமையாம் என்பது.

பெருந் தேவனார் என்பதில் ஆர் உயர்வு குறித்து வந்தது. பாரதம் என்பது பாரதர்களின் சரித்திரத்தை யுணர்த்து நூல். பாரத ராவார் துட்டியந்தனுக்குச் சகுந்தலையி னிடம் பிறந்த பரதன்து வழியிற் றோன்றினார். வடமொழியாளர் இங்ஙனம் வருவனவற்றைத் தத்திதாந்த நாம பதமென்பர். பரதனது வழியிற் றோன்றினார் பலராயினும் ஈண்டுப் பாரதர் என்பது காரண விடுகுறியாய்ப் பாண்டவர்களையும், சுயோதனன் முதலிய நூற்றுவரையு முணர்த்திற்று.

இந்நூல், (1) ஆதிபருவம், (2) சபா பருவம், (3) ஆரணியபருவம், (4) விராடபருவம், (5) உத்தியோக பருவம், (6) வீட்டும பருவம், (7) துரோண பருவம், (8) கர்ண பருவம், (9) சல்லிய பருவம், (10) சௌப்திக பருவம், (11) திரீ பருவம், (12) சாந்தி பருவம், (13) அநுசாசநிக பருவம், (14) அசுவமேத பருவம், (15) ஆசிரமவாச பருவம், (16) மௌசல பருவம், (17) மகா பிரத்தான பருவம், (18) சொர்க்காரோகண பருவம் எனப் பதினெட்டுப் பருவங்களாகப் பகுக்கப்பட் டிருக்கின்றது.

கடவுள் வணக்கம்

கடவுள் வணக்கம் என்னுந் தொடருக்குக் கடவுளை வணங்கும் வணக்கம் எனவும் கடவுளுக்குச்செய்யும்வணக்கம் எனவும் இருவகையாற் பொருள் கூறுதலாம். இது முற்கூறியபொருளில் இரண்டனுருபும் பயனுமுடன் றொகை. பிற்கூறியபொருளில் நான்கனுருபும் பயனுமுடன் றொக்க தொகை. இங்ஙனந், தொகைநிலைத் தொடரொன்றிற்கேஇருவகையாற் பொருள் கொள்ளுதலாமோ எனின், இரண்டேயல்ல, இரண்டு முதல் ஏழ்வகை யளவும் பொருள் கொள்ளுதலாம்; அதனை,

"தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ், எல்லைப்பொருளின் மயங்குமென்ப" என்றதனு லறிக.

இவ்வாசிரியர், ஈண்டு விநாயகர், கலைமகள், திருமால் என்னு மூவர் கடவுளர் வணக்கங் கூறினார். இவருள் விநாயகர், இப் பாரதத்தைச் சீதப்பனிக் கோட்டு மால்வரைமேற் றீட்டியவ ராதலானும், திருமால் இந்நூலின் கதையோடியைபுடையவ ராதலானும், ஈண்டிவர்கட்குக் கூறிய வணக்கம் ஏற்புடைய கடவுள் வணக்கமாம். கலைமகளுக்குக் கூறிய வணக்கம் வழிபடு கடவுள் வணக்கமாம். ஏற்புடைய கடவுள் வணக்க

மாவது எடுத்துக்கொண்ட நூலோடு தொடர்புடைய கடவுளை வாழ்த்துதல். வழிபடு கடவுள்வணக்கமாவது அங்ஙன மின்றித் தாந்தாம் வழிபடு கடவுளைவா ழ்த்துதல். கடவுள் வணக்கம் என்பது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிற ந்த அன்மொழித் தொகையாய் வணக் கங்கூறுஞ் செய்யுளை யுணர்த்திற்று.

உலகங்கட் கெல்லாம் ஈடு மெடுப்பு மில் லிறைவராகிய கடவுள் ஒருவரே யல்லரோ? இவர் பல கடவுளர் உள ராக வைத்து வணக்கங் கூறிய தென்னை யெனின், வடமொழி வேதத்தின்கண் முனிவர்கள் பல கடவுளை வருணித்திருத் தல் கொண்டு இவர் இங்ஙனம் பல கட வுளர் வணக்கம் கூறினா ரென்பது. ஆயி னும் இவர் எட்டுத் தொகை, இந்நிலை யென்னு நூற்களிற் கூறிய வணக்கச் செய்யுள்களையும், இப்பாரதத்தின்இடை யிடையே கூறுங் கண்ணன் துதிகளையுங் கருத்துற்று நோக்குவார்க்குக் கடவுள் ஒருவரே பலராலும் பல கடவுளரின் வடிவமாக வைத்து வணங்கப்படுகின் றன ரென்னுங் கருத்துடையவ ரென் பது நன்கு விளங்கும்.

விநாயகர் வணக்கம்

நேரிசை வெண்பா

ஓத வினையகலு மோங்கு புகழ்பெருகுங்
காதற் பொருளனைத்துங் கைகூடுஞ்—சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேற் பாரதப் போர் [தீட்டுந்
தனிக்கோட்டு வாரணத்தின் றாள்.

(இ-ள்.) சீதம்-குளிர்ச்சியாகிய, பனி கோடு-பனியினைக் கொண்ட சிகரங்களை யுடைய, மால்வரைமேல்-மகா மேருமலை யின்மீது, போர் - (பாண்டவர்கட்கும், துரியோதனன் முதலியவர்கட்கும் உண் டான) போர்ச் செய்தியை முதன்மை யாகக் கொண்ட, பாரதம் - பாரதம் என்னு மிதிகாசத்தை, தீட்டும்-எழுதிய, தனிகோடு-ஒப்பற்றதந்தத்தினையுடைய, வாரணத்தின்-யானை முகத்தினைக் கொ ண்ட விநாயகக் கடவுளுடைய, தாள்- திருவடிகளை, ஓத-துதித்தால், வினை அக லும்-தீவினைகெடும், ஓங்கு புகழ்-(அவ ர்களின் பெயர் உலகில் நீடித்தற்குக் காரணமாகும் புகழ், பெருகும்-மிகுவ தாம்; காதல் பொருள் - (அவர்களின்) விருப்பத்திற் குரிய பொருள்கள், அனை த்தும்-எல்லாம், கைகூடும் - (அவர்கட் குக்) கிடைக்கும், (எ-று.)

(விசேட வுரை.) இச் செய்யுளி னீற் றிலுள்ள 'தாள்' என்பது முதலி லுள்ள 'ஓத' என்பதனோடுசென்றியைந்தது. இ ங்ஙனமியைந்து பொருள்பயப்பதனைப்பூ ட்டுவிற் பொருள்கோள்என்பர். அதனை,

"எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்
பொருணோக் குடையது பூட்டுவில் லாகும்"
(நன்-பொ-இ-64-சூ)

என்பதனா லறிக. 'தீட்டுங் கோடு' என இயையும், முன்னரேதீட்டியசெய்தி யாதலின் தீட்டிய என இறந்தகாலத்தா ற் கூறவேண்டுவதனை தீட்டும்என எதிர் காலத்தாற் கூறியது இயல்பின் வந்த கால வழு வமைதி. செய்யும் என்னும் வாய் பாட்டுவினை "செய்யு நிகழ்பெதிர் வும்" (நன்-ப-இ-18-சூ) என்றதனால் நிகழ் காலத்திற்கும் எதிர் காலத்திற்கு முரியதெனக் கோடற் குரியதாமேனும் அஃதிக்காலத்திலே எதிர்காலத்திற்பயி ன்றுவருதலின் எதிர்காலம்எனப்பட்ட து. ஆசிரியர்-தொல்காப்பியனார் இதனை நிகழ்காலச் சொல்லென்றே கூறுவர். அதனை (தொ-சொ-அ-வி-இ-30-சூ.)

"பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மை
அவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யுமென்னுங் கிளவியொடுகொள்ளா

என்னுஞ் சூத்திரத்து 'நிகழுங் காலத் துச், செய்யுமென்னுங் கிளவி' என்றத னா லறிக. ஓங்கு புகழ் வினைத் தொகை. இது ஓங்குதற்குக் காரணமாகிய புகழ் என்றாதலின் காரியப் பொருளதாகிய பெயரெச்சத் துறப்புத் தொக்குவந்த வினைத் தொகையா மென்க.

காதற் பொருள் என்பது காதற்குரிய பொருள் என்றாதலின் தகுதிப் பொரு ளதாகிய உருபும் பயனுமுடன் றொக்க நான்கன் றொகை. பெரிதாகிய, அல்லது மேன்மையாகிய என்னும் பொருளைத் தரும் மகா என்னும் வடமொழி யை அப்பொருள்களையே தரும் 'மால்' என்னுந் தென்மொழியாற் கூறினார்.

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,
பச்சையப்பன்காலேஜ், தமிழ்ப்பண்டிதர்

தனித்தமிழ்ப் பகுதி

தனித்தமிழ்

அங்கண் மாநிலத் தறிவுடை யுயிர்கள்
இங்கித முற்றது, இனிமை பெற்றது,
நவின்றோர்க் கினிமை நயம்பட மிகுப்பது
என்றுபல் வகையான் இசைத்திட நின்றது
தொன்றுதொட் டுளதெனத் தேர்ந்தவர் சொல்வது
தென்மொழி யாம்நஞ் சீர்பெறு தமிழ்த்தே
பன்மொழி யாளர் பயிலுற்ற வதனால்
எங்குந் தன்னேர் இன்சொல் இசைந்து
தங்குமா நேர்ந்த தலைமையக் குறுநாள்
வேற்று மொழிகள் விரவிட வேற்றுச்
சாற்று நினதெழில் சாலக் குன்றிடத்
தோற்றும் அன்னாய் ! தொலைவிலா வுன்றன்
மாட்சியைக்கேட்டு மாழ்ந்திடலானேன்
பொருப்புஞ் சங்கத திருப்பும் மூவர்
ஆட்சியின் நிறைது அரும்பெருங் காட்சியும்
எங்குச்சென் றொளித்தன என்னணமாயின
திங்கண் மேனியாய் ! திகழ்நாற் கையோய் !
பிறப்பேய் நாண்முதல் பீடுசேர் உனது
சிறப்பார் தேறலின் தீஞ்சுவை மொழியே
பயின்றுங் கேட்டும் பயந்தவர் தமக்கு
மெய்ப்புள கித்திட வுளமது நெகிழ்ந்திட
மழலை மொழிந்தும் மன்னிய நின்றன்
கழலடிச் சுவடு காட்டுறு நூற்கள்
கற்பவை கற்றுக் கற்றவர்ச் சார்ந்து
பொற்புறு முன்றன் பொலிவை வியக்குநாள்.
நின்கெழு தகைமை நின்று பொன்றிட
வழக்குறு மாற்றிற் பழக்க மேவா
மறுபுல மொழிகள் வந்து புகுந்து
மறுவுறச் செய்ததை மறுத்தவ ரிலையோ !

அன்றும் இல்லைகொல்! இன்றும் இல்லையே
இன்னினி யேனும் உன்னரு ணோக்கம்
எம்மவர் மாட்டு இனிதே செல்ல
அம்மவோ! தமிழாம் அணங்கே! யாயே!
அருளருள் அன்னைநின் அறைகழல் வாழ்க!
தெருளுறு நினாது தேமொழி
மன்னி வாழ்கநின் மாணரு ளாலே.

மாநிலமதனிற் றோன்றிய மன்பதைகள் தத்தம் உறைவிட வேறுபாட்டான் பல்வகை மொழிகள் மொழியா நிற்பர். அவற்றுள் குடகம், வேங்கடம் என்னும் மலைகளையும் கன்னியாறு, கீழ்க்கடல்களையும் எல்லைகளாகக் கொண்டு வழங்கும் மொழி தமிழ் என்னுந் தென்மொழியாம். இது இனிமை பயப்பதென்றும் பேசு நடையினும் செய்யுணடையிலும் இடர்ப்பாடின்றி இசை பெற்றதொன்றென்றும் பலதிறத்தான் புகழ்ந்து கூறும் புலவர் முன்னும் பின்னும் இன்றும் நிலவினர் நிலவுகின்றனர் என்னற்கு ஐயப்பாடின்றாம். இன்மொழியாம் தமிழ் மொழியைத் தாய் மொழியாக் கொண்ட தமிழ் மக்கள் பிறமொழி வழங்கும் வேறு நில மக்களோடு கலப்புற்று அவர்கள் மொழியைச்சார்ந்த சொற்களை நம் அரிய மொழியில் சேர்த்துத் தனித் தமிழ் மொழியை விரவுற்ற வோர் கலப்பு மொழியாக்கினர். இதனால் வந்து புகுந்த பிற நில மொழிச் சொற்கள் வழங்கும் இடங்களில் இருந்துவந்த நந்தம் பண்டைத் தமிழ் மொழிச் சொற்கள் வழக்கமின்றியதால் இறந்து பட்டனவோ அன்றி வேறுபொருளில் வழங்கி வருகின்றனவோவென எண்ணற்கிடமாயின. கடவுண் மொழியெனச்சாலச் சிறப்பித்துமட்டும் கூறும் தமிழர்கள் தமிழில் அவை இயைந்து நடக்குமாற்றால் இது தமிழ் மொழிச்சொல்தான் அன்றி பிறமொழிச் சொல் தான் என்றேனும், பிறமொழிச் சொல் இசைந்து நடக்கும் இடத்தில் இருக்கத்தக்க தமிழ்ச் சொல் இது என்றேனும் எடுத்துக் காட்டினாரில்லை. என்னே! நந் தமிழ்மக்களின் அன்பு அவர்களின் தாய்மாட்டு இருந்தமை. அங்ஙனம் ஆவது அரிதெனவிடுத்தாரெனினும் இவர்கள் தமிழ்வேலைகளையேனும் தனித் தமிழில் புரிகின்றார்களா? இல்லையே! தமிழ், செந்தமிழ், முத்தமிழ் முதலிய புனைப் பெயர்களை நுதற் சுட்டிகளேபோல் இட்டுக்கொண்டு பெரும்பான்மையும் பிறமொழிச் சொற்கள் விரவுதலையே சிறந்த தமிழ் என மாறுபடக்கொண்டு தமிழை நாளுக்குநாள் வளர்ச்சியில் குன்றச்செய்து வருகின்றனர். இவர்கள் பிறமொழிச் சொற்களில் துரைத்தன மொழியில் பயின்றோர் தமிழில் இடையிடையே துரைத்தன மொழிச் சொற்களை புகுத்துவதை வெறுத்தும், இழித்தும் கூறுநிற்பர். தங் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் பார்த்தல் எத்துணை யிழிவுடைத்தாம் என்பதை யோர்ந்திலர். இந்நிகழ் விளம்பியின் நுவல்வோரும், தலைவரும் தனித் கமிழ்ப் பிரிவை (தம் கலாசிந்தாமணி யென்னும் இப்பத்திரிகையில்) உளதாக்கி யதில்வரும் பொருள்களெல்லாம் தனித் தமிழில் எழுதி வெளிப்படுத்தி யிங்ஙனம் மறந்திருக்கும் நம் அருமைத் தமிழ் மக்களுக்குத் தமிழின் வளர்ச்சியின் பொருட்டு விழித்தெழுமாறு தூண்டற்காக இவ்வரிய முயற்சியை மேற்கொண்டது மிகுதியும் பாராட்டத் தக்கதென வுன்னி அவர்களது கருத்திற்கிசைந்து தமிழணங்கின் சிதைந்த சீர்த்தியைச் செம்மைப் படுத்துவதில் எம்மாலாம் அளவு முயன்று ஏற்றும், கற்றறிந்த மேலோர்களை யிவ்வழியில் அவர்களது [illegible]க்க மிருந்துவரின் ஏற்றமுடையதாம் என இடநோக்கியமைச்சர்க்குறு தொழில்போல இடித்துரைத்தலாம் இன்னாசெயலில் இழிந்

ததுபோல்காட்டியவரது சீரிய ஒழுக்கத்தின்நேரியசெயலால் இத்தகையுழைப்பினால் தமிழ்மொழிக்காக இனியவர்கள புரியப்போகும் எழினுற்ற முயல்வான் தமிழ் ஞாலம் தமிழுக்கு இழிதகைமையாக்கும் பிறமொழிச் சொற்களை மிகந்து இனிமையைப் பெறுமாறு திருவருளை யுன்னுகின்றோம்.

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்,
சூளை, சென்னை.

"கோகழி" உண்மை

இத் தொடர் மொழிக்கு மதுரைச் "செந்தமிழில்" திரு. கந்தசாமியார் என்பார் சில ஆண்டுகளுக்கு முன் பொருள் கண்டிருந்தனர். அது இப்பொழுது எம்பார்வைக் கெட்டியது. அதில் அவர் முன்னதாகவே மேற்றொடர் மொழிக்கு இருவர் பொருள் கண்டிருந்ததாகவும், அவர்களில் ஒருவர் அக் "கோகழி" என்பது 'திருவாவடுதுறை' என்றதாகவும், மற்றொருவர் 'திருப்பெருந்துறை' என்றதாகவும், அவ்விருவர் கூற்றுக்களும், பொருத்தமில் கூற்றுக்களெனக் கொண்டு, அவ்விருவரையும் மறுத்துத் தாமொருபொருளை எடுத்துக்காட்டித் தங்கோண் மேற்கொண்டார்.

1. அவர் எடுத்துக்கொண்ட "கோகழி" என்னுந் தொடர்மொழி நம் மணிமொழிப் பெருமானார் நூலில், (திருவாசகத்தில்) முதலகவலில் மூன்றாவது அடியில் உள்ளது.

2. இதற்குத் தங்கோணிறுவ, அந்நூலின்கண் "பண்டாய நான்மறை" யில் ஒரு வெண்பாவையும், சில சொற்றொடர்களையும்; "திருக்கோவை யாரில்" ஒரு கலித்துறையையும் காட்டுகளாகக் கொண்டார்.

அவ்விரண்டி லிது வெண்பா.

"நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல, வெண்ணி யெழு கோகழிக் கரசைப்—பண்ணின், மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக், கழியாதிருந்தவனைக் காண்." என்பது.

அந்நூலிற் சில சொற் றொடர்கள் : "செல்வர் சிவபுரத்துள்ளார்" "சிட்டனே சிவலோகனே" "சிவலோக நாதனை வரக் கூவாய் குயிலே." என்பன.

திருக்கோவையாரிற் கொண்டது:

"சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப், பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு, துங்க மலிதலையேந்தலி னேந்திழை தொல்லைப் பன்மா, வங்க மலிகலி நீர்தில்லை வானவ னேர்வருமே" என்பது.

இஃதறியாள் போற லெனுந்துறை.

இவர் மேலே எடுத்துக்காட்டின வெண்பாவில், "பெருந்துறை," "கோகழி," "உத்தர கோச மங்கை," ஆகிய இப்பேர்கள் தனித்தனிக் கூறப்பட்டிருக்கின்றமையால், "பெருந்துறை" வேறு; "கோகழி" வேறு; எனக் கூறியதுடன்,

"உத்தரகோச மங்கை மன்னி யிருந்தானை, கோகழிக் கரசை, நம்மிடர்கள் போயகல, பெருந்துறையை நண்ணிக் காண்" எனக்கொண்டு கூட்டின் வெள்ளிடை விளங்கலா மெனவும், [அவ்வெண்பாவிற் சொற்கூட்டி,] இனி இத்தொடர்மொழிக்கு நம் பெருந்தகையார்திருவாக்கைக் கொண்டே பொருள் காண்டல் மிக்க வலி யுடைத்தா மாகலின், அத் தொடர்மொழிப் பொருளைச் சீரிய திருக்கோவையாரில் 'சங்கந் தருமுத்தி' என மேற்காட்டின கலித்துறையில் "கோகழி" என்பதனையே, 'வான்கழி' எனக் கூறி யிருப்பதாகப் புலனாகின்றதெனக்கொண்டு, அத் திருப்பாட்டிற்கு உரைகண்ட பேராசிரியர், "வான்கழி தான்கெழுமி" என்பதற்கு; ஆகாயத்தைக் கடந்து நின்ற தான ஒருவடிவு கொண்டு பொருந்தி யெனக் கொண்டு 'வான்கழி' என்பது சிவலோக மெனினும் பொருந்துமென்று அமைதி கூற

லின், 'தான்கெழுமி' என்பதற்கு, அச் சிவலோகத்துத் தானொரு வடிவுகொண்டு அதனிடத்துப் பொருந்தி யெனவும், பொருள்கோடல் ஆசிரியர் துணிபாமென்க; எனவும்; "கோ" என்பது ஆகாயத்தின் பரியாய்ப் பெயராகலான் 'வான்கழி' என்பதனையே நம் பெருந்தகையார் 'கோகழி' எனக் கூறினாரென்க, எனவுங் கூறி, 'வான்கழி' என்பதற்குப் பேராசிரியர் சிவலோகமெனப் பொருள் கோடலின்;

'கோகழி யாண்ட குருமணிதன் றாள் வாழ்க' என்பதற்குச் சிவலோகத்தை யாண்ட பரமாசாரியன் திருவடி வாழ்க எனப் பொருள் கோடலே பொருத்தமுடைத்தா மென்க; எனக் கூறித் தங் கருத்தை நிலைநிறுத்தினார்.

இனி எம் மாராய்ச்சி வருமாறு:—

நமது மணிமொழிப்பெருமானார் முற்குறை நிறைக்கவந்த முன்னவ'ராதலின், அவரைப்,

"பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும், தொண்டரைத் தானே தூய கதியினிற் றெருப்பன்"

என்று சிவஞான சித்தியாரிற் கூறிய படி பெரியனே (சிவபெருமானே) அடிமைகொள்பவனாக (குருவாக) வடிவங் கொண்டு வந்து ஆளவேண்டியது கடமையாகலின், அவ்வாறேநம்மணிமொழிப் பெருமானாரை, மன்னன் குதிரை வாங்கிவர ஏவச், சென்றவழித்,திருப்பெருந்துறையி லோர்சார் ஆண்டருளினரென்பது நூல் வரலாறாகலான்; மேலே எழுதியுள்ள,

"நண்ணி" என்னும் வெண்பாவை,

"—பண்ணின் மொழியாளோ டுத்தர கோச மங்கை மன்னிக் கழியா திருந்தனை—நம்பிடர்கள் போயகல வெண்ணிப் பெருந்துறையை நண்ணிக்—கோகழிக்கு எழு அரசைக் காண்" எனச் சொற்கூட்டி;

இறைவியுடன் உத்தர கோசமங்கை மன்னி யிருந்தவனை, நந்துன்பங்கள் ஒழிந்தகல வெண்ணித் திருப்பெருந்துறையை யடைந்து கோகழிக் கண் எழுந்தருளின ஆண்டானை ஈண்டுக் காண்பாயாக எனப் பொருள் கோடலே சாலச் சிறப்புடைத்தா மென்க.

இல்லையேல், நூல் வரலாற்றுக்கும், ஆன்றோர் ஆட்சிக்கும், பூனை வழக்குக்கும் (மார்ச்சால நியாயம்) முரணா மென்க.

அன்றி, இவ்வெண்பாவைக்கொண்டு, 'திருப்பெருந் துறை' வேறு; 'கோகழி' வேறு; எனப் புகன்றவர், அம்மட்டமையாது, இக் 'கோகழி' யையே திருக்கோவையாரில் 'வான்கழி' எனக் கூறியதாக் கொண்டு, அவ் 'வான்கழிக்கு'ப் பேராசிரியர் 'சிவலோகம்' எனினும் அமையும் எனக் கூறியிருத்தலின், 'கோகழி' என்பது சிவலோகம் என்றார்.

ஈண்டு நம் மணி மொழிப் பெருமானார் கூறின 'கோகழி'யே, ஆண்டுத் திருக்கோவையாரில் 'வான்கழி' அல்லது 'ஆன்கழி' என்னப்பட்ட தென்பதற்கையமின்று.

ஆனால், 'கோகழி' என்பது இவர் கூறின 'சிவலோகம்' என்னும் பொருளதாகாது. பேராசிரியர் அங்ஙனங் கூறிய கூற்றொன்று; இவர் கொண்டதொன்றாகலான்.

பேராசிரியர்' வான்கழி' என்னுமிடம் சிவலோகம் எனினும் பொருந்து மென்றாராகலின், அது இதுவெனக் கொள்ளுங்கால் ஆண்டஃதப் பெயரா னழைத்தற்குமா மென்பதாமது.

இவர், 'நண்ணிப் பெருந்துறை' என்னும் வெண்பாவிலுள்ள 'கோகழி' எனுந் தொடர் மொழியை மட்டும் எடுத்துக் கொண்டு முடிவுரை செய்தாரே யன்றி, அச் சொற்றொடர் முன் 'எழு' என்னும் வினை யெஞ்சு கிளவி யொன்றிருப்பதை எண்ணினா ரில்லை. இக் கிளவி 'அரசு' என்னும் பெயர் கொண்ட தாகலின், 'கோகழி' என்பது அவ்விறை எழுந்தருளியடைந்தவிடத்தையே குறிப்பதொன்றாமேயன்றி, அவரிருந்த விடத்தைக் குறிப்பதாகவே மாட்டாது.

ஆகலின், அவ்வினை யெஞ்சு கிளவியே நாம் செய்த சொற்கூட்டை நிலை நிறுத்துமென்க. (தொடரும்.)

மா. வடிவேலு முதலியார்.

இல்லறம்

அறம் இன்னது என்பது

உலகத்தி லுள்ள எல்லா உயிர்களின் வாழ்க்கையிலும் இன்பமும் துன்பமும் ஆகிய இரண்டும் விரவி யிருக்கின்றன. அவற்றால் உயிர்களின் முயற்சிகளும் போராட்டங்களும் பலவாகக் காணப் படுகின்றன. இவ்வகையில் எல்லா-உயிர்களும் ஒப்பனவா யிருப்பினும் மாந்தர்களின் இயல்புகள் மற்றை எல்லா உயிர்களின் இயல்புகளி னின்று மிகுதியும் வேறுபட்டுத் தோன்றுகின்றன. அதற்கு அடி மாந்தர்களுக்கு மற்றை உயிர்களுக்குள்ள அறிவுகளினுஞ் சிறந்ததோர் அறிவைக் கடவுள் கொடுத்திருப்பதே. அந்த அறிவு இது நல்லது; இது தீதென்று பகுத்துணர்தற்கு ஏற்றதாய் இருக்கின்றது. அன்றியும் மாந்தர்களுக்கு மற்றொரு நன்மையும் அமைந்திருக்கின்றது.

அது மாந்தர்கள் ஒருவர் கருத்தை ஒருவருக்குத் தெரிவித்தற்குரிய ஒலிகள் எழுத்தின் வடிவமான ஒலியாய் அமைந்திருப்பதே. மற்ற உயிர்கள் ஒன்றின் கருத்தை ஒன்றினுக்குத் தெரிவித்தற்குரிய ஒலிகள் அங்ஙனம் எழுத்தின் வடிவமாக அமைந்தன வல்ல.

மாந்தர்களிற் சிலர் மேற்கூறிய அந்த அறிவைக்கொண்டு இன்பத்திற்கு அடி யாது? துன்பத்திற்கு அடி யாது? என்று ஆராய்வா ராயினர். அங்ஙனம் ஆராய்ந்து அறிந்தனவற்றைப்பிற்கூறிய எழுத்தாலான மொழியில் எழுதி மற்றையோர்க்கும் பயன் படும்படி செய்யலாயினர். அவற்றால், மாந்தர்களின் வாழ்க்கை என்றும் ஒரேநிலையிலிராமல் நாளடைவில் மேன்மை யடைந்து கொண்டே செல்கின்றது. மக்கள் இங்ஙனம், ஆராய்ந்து இன்பத்திற்குஅடி, தத்தம் நற்செயல்கள் எனவும், துன்பத்திற்கு அடி, தத்தம் தீச்செயல்கள் எனவுங் கண்டுணர்வா ராயினர்.

இங்ஙனம் ஆராயத் தொடங்கியவர்களுக்குள், கடவுளைப் பற்றியும், இன்ப துன்பங்களை அடையும் உயிர்களைப் பற்றியும், அவ்வுயிர்களுக்குப் பற்றுக்கோடான உடலைப்பற்றியும், உலகங்களைப் பற்றியும் வேறுபட்டபலவகையானகருத்துகள் தோன்றுவனவாயின. அவற்றால், உலகில் கொள்கைகளும் பலவாயின. ஆதலின் அங்ஙனம் ஆராயப்புகுந்தவர்களுக்குள் உண்டான கருத்துகளின் வேறுபாடுகளாலேதான் மாந்தர்கள் எய்துதற்குரிய உறுதிப் பொருள்களைப் பகுத்துக் கூறும் நெறிகளும் பலவாயின என்பதை நாம் முதலில் நமதுள்ளத்தில் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

அங்ஙனம் அந்நெறிகள் பலவகைகளில் வேறுபடுவனவா யிருப்பினும், உயிர்கள் அடையும் இன்பத்திற்கும், துன்பத்திற்கும்அடி,நற்செயலும்,தீச்செயலுமே என எல்லா நெறிகளும் ஒரே படியாய்க் கூறுகின்றன.

இன்ப துன்பங்களுக்கு அடியான இந் நற்செயல் தீச் செயல்களைப் பகுத்துணர்ந்து தீச்செயலை நீக்கி நற்செயலைச்செய்தலையே அறம் என்று கூறினார்கள் அறிஞர்கள்.

அறம் என்பதில் அறு-பகுதி, அம்-விகுதி, உகரங் கெட்டது சந்தி. அறிஞர்கள் கூறிய நூற்களால் அறுத்துக் கூறப்பட்டது அதாவது மாந்தர்களுக்கு உரியது எனப் பகுத்துக் கூறப்பட்டது என்பதே இதன்பொருள்.

தினையை விதைத்தவர்கள் தினையையும், வரகை விதைத்தவர்கள் வரகையும் அறுப்பதுபோல நல்வினை செய்தவர்கள் அதன்பயனாகிய இன்பத்தையும், தீவினை செய்தவர்கள் அதன்பயனாகிய துன்பத்தையும் எய்துவார்கள், ஆதலானும், எல்லா உயிர்களாலும் விரும்பப்படுவதுஇன்பமேயாகலானும் இன்பத்துக்கு அடியான நற்செயலைச் செய்

தலையே அறம் என்று நூற்கள்கூறுவன வாயின. ஈண்டுச் செயல் என்றது உள்ளத்தால் நினைத்தலும், வாயாற் சொல்லுதலும், செய்தலுமாகிய மூவகைச் செயலையும் என்றுணர்க.

உ. அறத்தின் வகை.

அறம் மாந்தர்களின் இருவகையாகிய உள்ள நிலைமையினால் இல்லறம், துறவறம் என இருவகைப்படும்.

மாந்தர்களின் இருவகையாகிய உள்ள நிலைமையாவன. இவ்வுலக இன்பங்களிற் பற்று (அவா) உள்ளநிலைமை, அப்பற்று நீங்கிய நிலைமை என்பன.

இவ்வுலக இன்பங்களிற் பற்று உள்ளவர்கள் கொள்ளத்தக்க அறம் இல்லறமேயாகும். இவ்வுலகஇன்பங்களிற்பற்று நீங்கி வீட்டுலக இன்பத்தின்கண் உள்ளஞ் செல்லப் பெற்றவர்களே துறவறத்தைக் கோடற்குரியவர்களாவார்கள். அல்லாதவர்கள் பெருமை, பொருள் முதலியன எய்துதற் பொருட்டு வஞ்சனையாகத் துறவறங் கொள்ளுதல் உயர்ந்தோர்கள் கண்டு 'இவர்கள் வன்கண்ணர்கள்' என்று எள்ளி உரைத்தற்கு அடியாவதோடு தம்முயிர் கெடுதற்கும் அடியாம்.

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல்வஞ்
வாழ்வாரின் வன்கணா ரில்" [சித்து
எனவும்,
"பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க
[மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்"

எனவுந் திருவள்ளுவர் அருளியனவும் இக் கருத்துப் பற்றியனவே.

இவ்வுலக இன்பங்கள் பொறிகளுக்குப் புலப்பட்டுத் தோன்றுவன வாகலின் மாந்தர்களுக்கு அவற்றிலே தான் பெரிதும், கருத்துச் செல்வதாகும். வீட்டுலக இன்பம் பொறிகளுக்குப் புலப்பட்டுத் தோன்றுவதன்று ஆகலின், அதில் மாந்தர்களுக்குக் கருத்துச் செல்லுதல் மிகவும் அருமையாகும். ஆதலின், மாந்தர்கள் முன்னே கொள்ளத்தக்கது இல்லறமே.

(தொடரும்.)

கா. ர. கோவிந்தராஜ முதலியார்

மாணவர் பக்கம்

தொடக்கக் கல்வி

[ஆரம்பக் கல்வி]

(இளையோர் எழுத்துப் பயிற்சி முறை)

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப்போல்' என்றபடி சிறுவர்களுக்குக் கவலைகளின்றித் தம்மைச் சுற்றியுள்ள பொருள்களைப் பற்றியும் அவற்றின் நிகழ்வுகளைக் குறித்தும் அறிந்துகொள்ள ஆவல்கொண்டு அடுத்தாரைக் கேட்டு அறிய முற்படும் நாள் இளமை வயதேயாகும். அவ்வயதில் கற்பிப்போனாகிய கல்தச்சனையான் குடும்பக் கவலைமுதலிய அலைபோன்ற மேடு பள்ளங்களமையாத செப்பமான அவர்களின் மனப்பாறையில் எழுத்துக் குறிகளை போல் கல்வியாகிய பதிவை யுண்டாக்குவனேல் அப்பதிவு விரைவில் அழியாது, எண்ணுந்தோறும் இனிமை பயந்து எடுத்துரைக்கக் கேட்டவரையும் களிகடலில் மூழ்குவிக்கும். கல்வி யென்பது இயற்கை செயற்கை யறிவுகளைச் சீர்படுத்தி விதி விலக்குகளை யறிந்து உயர்ந்தோர் நடையோடு ஒக்க ஒழுகும் ஆற்றலை யறிவிப்ப தொன்றாயினும் வழக்கத்தில் முன்னோர் நூல்களைக் கற்றுத் தாம் கொண்டிருந்த கசடற்று விளங்குவதற்குத் தகுதியாகிய ஏதாவதொரு மொழியைப் பயிலுதலும் அதின் கருவி நூல்களைக் கற்றலும் முதலிய பழக்கத்தைக் கல்விக்கு எவரும் கொள்ளும்பொருளில் ஒழுக்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆக, மொழி பயிலுதலே

கல்வி கற்றலாய்க் கருதப் படுகின்றமையின் ஏதேனுமொரு மொழியை இளஞ் சிறுர்க்கு முதன் முதலில் பயிற்றுவித்தலேயே தொடக்கக் கல்வி யெனத் தலைப் பெயர் புனைந்தது. தேனினும் இனிய தென்மொழியாம் நந்தம் தாய்த் தமிழ் மொழியை இதுவரையினும் கற்பிப்போர் ஆற்றலுக் கேற்றவாறும் ஏற்பட்ட நாள்அளவுக்கும் இசையக் கற்பித்து வந்தனர். இந்நாட்களில் பழைய கற்பிக்கும் முறைகள் பெரும்பான்மையும் கழிந்து, புதிய கற்பனு முறைகள் தோன்றி ஆங்காங்கு அவற்றின் நெறிக்கிணங்கக் கற்பிப்போர்துரைத்தனத்தாரால் விளைவிக்கப்படுகின்றமையால் புதியன புகுதல் வழுவலவாதல்பற்றி இளஞ் சிறுர்க்கு இனிய நெறியில் இத் தமிழ்க் கல்வி யெழுத்தறிவை யெளிதில் உண்டாக்கும் முறையை வேண்டிய இன்றியமையாத குறிப்புகளால் எடுத்தியம்புதும்.

'தொடங்குங்கால் துன்பமா யின்பம் பயக்கும்' என்ற ஆன்ருேர் மொழிப்படி சிறுவர்களுக்கு வெறுப்பையுண்டாக்கும் வழியால் எழுத்தைக் கற்பிப்பதை விட விருப்ப மூட்டும் விதங்களில் கற்பிக்கும் முறையை யமைத்துக் கொண்டு கற்பிக்கப் புகுதல் சாலச் சிறந்ததாம். குழவி வயதிலிருந்தே பிள்ளைகளின் செயல்களைக் கண்ணுேக்கி வருவோமாஞல் சிறுவர்களின்செயல்கள் பொருள்களைப் பார்க்கவும், அவற்றைக் கைகளால் தொடுதல், பற்றுதல், வாயிலிட்டுச் சுவைத்தல்முதலிய வுணர்ச்சிகளைப்பெறவும், அவற்றைக்கொண்டு ஆடல் புரியவும் விரும்பி, விரும்பியாங்கு புரிந்து பொழுது போக்குவது நமக்குத் தெளிவாம். அவர்கள் பாரில் தோன்றிய நாள் முதல் படிப்படியாய் ஐம்புல னுகர்ச்சிகளில் காண்டல், தீண்டல், கேட்டல், கூறல் இவை முதலில் தொடங்கி முதிர்ந்தபின் எண்ணும் உணர்ச்சியும், நினைவில் நிற்கும் வன்மையும் உண்டாகின்றன.

சிறுவர்களுக்குத் தெரிந்த பொருள்களிலிருந்து அவர்கள்அறியாத பொருள்களை அறிவிப்பது சிறப்பாகும். ஆகவே பிள்ளைகளுக்குப் பார்த்துக் களிக்கக் கூடிய விதங்களில் அவர்களுக்குக் கற்பிக்கப்போகும் தமிழ் மொழியின் எழுத்துக்களை அட்டை, கட்டை, பித்தளை, ஈயம் முதலிய பொருள்களால் பெரிய வடிவங்களாய்ச் செய்து,

1. காண்டல்
2. தீண்டல்

அவர்களுக்குக் காட்டல், அவ்வெழுத்து வடிவப் பொருள்களைத் தங்கள் பலகைகளின்மேல் சரியாய் வைக்கச் செய்தல்,

3. கேட்டல்
4. கூறல்

அவ்வெழுத்தின் ஒலியைச் சொல்லல், சிறுவர்களைச் சொல்வித்தல் பலப்ப முதலிய எழுது கருவிகளால் அவ்வடிவங்களைச் சுற்றிலும் பலகையில் வரிவடிவ முண்டாகும்படி எழுதுவித்தல்,

5. கையாளல் — எழுத்துருவப் பொருளைப் பலகையினின்றும் எடுத்துவிட்டுப் பலகையில் காணும் வரிவடிவத்தின்மேல் பன்முறை எழுதுகோலால் சிறுவர்களை எழுதச்செய்தல். பிள்ளைகளிடம் சிறுசிறுகுச்சித்துண்டுகளின்

6. குச்சிவைத்தல் — கற்றைகளைக் கொடுத்து அக் கற்றைகளிலிருந்து குச்சிகளைப்பிரித்தெடுத்து அவ்வெழுத்தின்வரிவடிவின்மேல் ஒழுங்காய் வைக்கச் செய்தல்.

7. கொட்டைவைத்தல் — புளி, சீதா, ஈச்சு முதலியவற்றின் விதைகளாகிய கொட்டைகளை அவ் வரிவடிவத்தின்மேல் நிரல்பட அமைத்தல்

8. களிமண்வேலை — ஈரக்களிமண்ணில்கொஞ்சம் கையில்எடுத்து நீண்டகம்பிபோல் திரட்டிக்கொண்டு அவ்வரிவடிவின்மேல் வைக்கும்படி செய்தல். எழுத்தின் ஒலி வடிவை யுரைக்கும்படிசெய்து பின் பிள்ளைகளை வெளியில் அழைத்துப் போய்க் கைகளையலம்பச்செய்து அழைத்து வந்து உட்காரச் செய்து பிள்ளைகளின் உற்சாகத்தையும், ஊக்கத்தையும்

9. கதைசொல்லல் — நுட்ப அறிவையும், நன்னெறியையும்விளைக்கக்கூடிய ஏதேனும்சிறுகதையொன்று தெளிவான நடையில் ஆசிரியன் கூறல்.

கூறியதை மொத்தமாகவாவது சிறிது

10. கதையைச் சொல்வித்தல் சிறிது பங்காக வாவது பிள்ளைகளைச் சொல்லி முடிக்கும்படி செய்தல். அவர்கள் கூறுவதில் தடுமாற்றமுற்று மயங்கும் இடத்திற் கேற்பச் சொற்களை யுதவல். ஆகிய முறைப்படி செய்து முடித்தலாம். எழுத்துக்களைக் கற்பிப்பதில் ஓசையால்ஒற்றுமையுடைய இன வெழுத்துக்களைச் சேரக்கற்பித்தல் சால நன்று. அகாரத்தோடு ஆகாரத்தையும், இகாரத்தோடு ஈகாரத்தையும் இப்படி யிரண்டிரண் டெழுத்துகளாகக் கற்பித்து முடித்தலாம். பிள்ளைகள்

11. பாடல் முதல் எத்தகைய உயிர்களும் இனிய இசையைக் கேட்க விரும்புவார்க ளாதலால் பிள்ளைகளுக்குக் கற்பித்த எழுத்துக்களைப் பற்றியே பாட்டை யமைத்து இசைக் கிணங்கச் சொல்வித்தல் நலம். (தொடரும்.)

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்,
சூளை, சென்னை.

பெண்கள் பக்கம்

சீதை

கோசலம்என்ற ஓர் நாடு உண்டு. அது சரயு ஆறு பாயப் பெறுவதால் நீர் வளம், நிலவளங்களை யுடையதா யிருந்தது. அந்நாட்டில் அயோத்தி என்னும் அழகிய நகரம் தலைநகரா யிருந்தது. அந்த நகரத்திலிருந்து தசரதர் என்னும் அரசர்க்கரசர் ஆட்சி புரிந்து வந்தார். அவர் கதிரவன் தன் மரபைச் சேர்ந்த இட்சுவாகு என்னும் அரசன் வழியில் தோன்றினவர். அவருக்கு முதிர்ந்து தள்ளாமை நேரிட்ட வயது வரையில் பிள்ளை பிறக்கவில்லை. தனக்குப் பின் தன் அரசையேற்று நாட்டை ஆட்சிசெய்யப் பிள்ளை யில்லாததைப் பற்றி

மிகுந்த கவலை யுடையவரா யிருந்தனர். இப்படி சின்னாள் கழிய முனிவர்கள் சிலர் அரசருக்கு ஏற்பட்டவருத்தத்தை யறிந்து வேள்வி யொன்று புதல்வரைப் பெறுவதின் பொருட்டுப்புரிந்தால் பிள்ளைகள் பிறக்கும் என்றனர். அவர்கள் சொன்னபடி வேள்விக்கு வேண்டியஎல்லாப் பொருள்களையும் கொண்டு சேர்த்து வேள்வியைச் செய்து முடிக்க விரும்பினார். தசரதர் கருத்துப்போல் அவரது ஆசிரியராகிய வசிட்டமுனிவர் இன்னும் சில முனிவர்களோடு இருந்து வேள்வியைச் செய்யத் தொடங்கிச் செய்து வந்தனர். அப்படி வேள்வி நிறைவேறி வரும்போது வேள்விக் குழியில் எரியும் நெருப்பிலிருந்து ஓர் உம்பன் தோன்றி வேள்விக்குரிய தலைவராகிய தசரதர்கையில் தூய பாலுணவைத் தந்தனன். அதைப் பெற்ற தசரதர் தன் ஆசான் சொற்படி அதைத் தன் கோசலை, கைகேசி, சுமித்திரை யென்னும் மனைவியர் மூவருக்கும் பகிர்ந்து கொடுத்து அருந்தச் செய்தனர். அப்படிக் கொடுத்ததில் கடைசியாக கலத்தில் எஞ்சிய பாலுணவை மீண்டும் கைகேசிக்கே ஈந்தனர் அரசர். சிலதிங்கள்கழிந்ததும் சித்திரைத் திங்களில் சிறப்பாக கோசலையிடத்து இராமனும் கைகேசிபால் பரதனும், சுமித்திரை வாயிலாய் இலட்சுமண சத்துருக்கினரும் பிறந்தனர். இவர்கள் நால்வரும் பிள்ளை யில்லாமல் அரிய முயற்சியால் கிடைக்கப்பட்ட அருமருந்தன்ன மகவுகளாதலின் மிக்க சீருடன் பாராட்டப் பெற்று வளர்ந்தனர். கல்வி கற்கும் வயது வந்தவுடன் கல்வியில் அவர்களைப் பயில்வித்து மறை முதலிய எல்லா நூல்களையும் படைக்கலப் பயிற்சியையும் கற்றுத் தேறினார்கள். இப்புதல்வர்கள் நல்லறிவு மிகுந்து எல்லா ஒழுக்கங்களிலும் மேன்மையுற்று மணஞ் செய்வதற்கு ஏற்றவயதை யடைந்திருந்தார்கள். அந்நாட்களில் ஓர் பகல் விசுவாமித்திரர் என்னும் முனிவரொருவர் அரசவை நண்ணி தாம் வேள்வி யொன்று முடிக்கவேண்டி யிருப்பதால் அதற்கு இடையூறு புரியும் தானவரைத் தகைத்துத் தன் வேள்வியை நிறைவேற்றத் தனக்கு உதவியாகஇராமனைத் தன்னோடு அனுப்பும்படி அரசரைக் கேட்டனர். அதற்கு முதலில் தசரதர் முன்பின் பார்த்தாரேனும் இறுதியில் இராமனையும் அவனைப் பணிவுடன் எப்போதும் சார்ந்து செல்லும் இலட்சுமணனையும் கூட்டியனுப்பினார். விசுவாமித்திரர் இவர்களோடு காடு சேர்ந்து தனது வேள்வியைச் செய்து முடிக்கத் தொடங்கினார். அப்போது அதை யழிக்க வந்த மலையும் குன்றுகளும் போன்ற வடிவங்களை யுடைய தாடகை, சுபாகு, மாரீசன் என்னும் அர



க்கியையும் அரக்கர்களையும் இராமன் தன் கைக்கணையால் தாக்கினான். இராமனுடைய வல்லமையால் தீய அரக்கியாகிய தாடகையும், சுபாகு என்பவனும் வீழ்ந்திறந்தார்கள். மாரீசன் மட்டும் ஓடித் தப்பினன். பின் எந்த வில்லங்கமும் இல்லாமல் விசுவாமித்திரர் தமது வேள்விக்கடனை முடித்தார். பின்னர் மிதிலைநகரில் அரசனால் நடக்க இருந்த வேள்விக்காக இவர்களிருவரையும் அம்முனிவர் அழைத்தேகினார். போம்வழியில் முன் தன் அறியாமையால் நேர்ந்த பிழையின் பொருட்டுத் தன் கணவராகிய கௌதம முனியால் இடப்பட்ட வசைமொழி பயனாக கல்வடிவங் கொண்டிருந்த அகலிகை யென்னும் அம்முனி மனைவி இராம



னது: தாள்கள் அக்கல்லில் பட்ட அதனால் முன்னை வடிவு பெற்று எழுந்து இவர்களை வணங்கித் தன் கொழுநரிடம் சேர்ந்தாள். கௌசிக முனியும் இராம இலட்சுமணரும் மிதிலை நகரையடைந்து சனகர் என்னும் அந்நகர் இறையால் காட்டப்பட்ட பெரியதோர் சிலையை இராமன் வளைத்து முறிக்க அச்செயலுக்குப் பணயமாக ஏற்பட்டிருந்த அம்மன்னன் திருமகளாம் சீதை யென்னும் பூங்கொடி யொத்த மடந்தையை மணமுடிக்கப் பெற்று அயோத்திக்குத் திரும்பி வரும்வழியில் கதிரவன் குடியில் தோன்றிய அரசரைக் கொல்லும் தீய செயலைக் கொண்டிருந்த பரசுராமர் என்னும் ஓர் பார்ப்பன முனி யெதிர்ப்பட்டு இராமனைப் பகைக்க அதில் இராமன் வெற்றிபெற்று அயோத்திக்கு வந்து சேர்ந்தார்கள். தசரதர் இராமனிடம் தன் அரசை யொப்புவிக்க எண்ணி முடிசூட்ட வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் முடிந்தபோது சிறு பிள்ளை வயதில் இராமன் செய்த விளையாட்டான குறும்பால் யானையைப்போல் கறுவிக் கொண்டிருந்த மந்தரை யென்னும் ஓர் முதிய பணிப்பெண் கைகேசியிடம் சென்று அவள் மைந்தன் பரதனுக்கு முடிசூடப் பெற்றால் அவளுக்கு நன்மை விளையும் என்று அவளைத் தூண்டிவிட அவள் தசரதரை யணுகி தனக்கு முன்னோர்நாளில் கூறியிருந்த உறுதிமொழிப்படி இந்நாள் தான் மிக விழையும் ஒன்றை முடித்துக் கொடுக்கும்படி கோர அரசரும் இசைந்தனர்.

(தொடரும்,)

ச. ஞானாம்பிகை.

CALENDAR—பஞ்சாங்கம்

ரௌத்திரி வருஷம் ஐப்பசி மீ			கேது		1920 வருஷம் அக்டோபர் மீ—நவம்பர் மீ		
			3-விரு-சுக் 27-மக-செ 28 தனு-சு	குரு சனி			
தக்ஷிணாயனம் கிரீஷ்மருது	பசலி 1329	சாலி 1843	செவ்	சூ-ப சு-ரா	கலி 5022	கொல்லம் 1095	ஹிஜிரி 1338

துலுக்கு	இங்கிலீஷ்	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், யோகம், தியாஜ்யம்	விசேஷம்.
4	17	1	ஞா	பஞ்-13-38, கேட்-10-29, சோ-38-23, ரா-3-6.	துலாசுக்லசஷ்டி
5	18	2	திங்	சஷ்-18 39, மூல-16-16, அதி-39-43, ரா-13-55.	அதிதி
ஸபர் 6	19	ஐப்பசி 3	செ	சப்-23-49, பூரா-23-12, சுக-41-4, ரா-15-46.	ஸப்தமிதிதி
7	20	4	புத	அஷ்-28-43, உத-29-22, திரு-12-5, ரா-10-54.	துர்காஷ்டமி
8	21	5	வி	நவ-33-3, திரு-34-58, சூல-12-32, ரா-16-23.	ஸரஸ்வதி பூஜா
9	22	6	வெ	தச-36-26, அவி-39-40, சண்-42 25, ரா-29-24	விஜய தசமி
10	23	7	சனி	ஏகா-38-45, சத-43-15, விரு.41-22, ரா-30-36	ஸர்வ ஏகாதசி
11	24	8	ஞா	துவா-39-44, பூரட்-45-43, துரு-39-18, சே-3-54	
12	25	9	திங்	தி-39-26, உத்ர-46-50, வியா-36-14, திவி-10-10.	ஸீமந்தம் துலா
13	26	10	செ	சது-37-55, ரே-46-49, ஹர்-32-14, திவி-16-50	
14	27	11	புத	○-35-14, அசு-45-38, வஜ்-27-18, ரா-6-38.	கிரஹணம்
15	28	12	வி	பிர-31-36, பர-43-33, ஸித-21-34, திவி-8-48.	விதிராமா
16	29	13	வெ	துதி 27-7, *-கா-40-38, விதி-15-11, ரா-21-8.	திதிதுவயம் தினா
17	30	14	சனி	திரு-22-2, ரோ-37-10, வரி-9-10.	
18	31	15	ஞா	சது-16-31, மிரு-33-13, சி-52-40, ரா-23-46.	பஞ்சமிதிதி
19	1	16	திங்	பஞ்-10-43, திரு-29-14, ஸித்-45-21, ரா-23 5.	
20	2	17	செ	ஸப்-54-8, புந-25-9, ஸ-37-35, ரா-15-22.	
21	3	18	புத	அஷ்-53-31, பூச-21-15, சுப-33-3, ரா-27-38	
22	நவம்பர் 4	19	வி	நவ-58-36, ஆயி-17-45, சுப்-22-52, ரா-17-49.	
23	5	20	வெ	தச-44-18, மக-14-50, பிரா-16-8, ரா-5-38.	
24	6	21	சனி	ஏகா-46-65, பூர-12-37, மா-9-59, ரா-1-47.	
25	7	22	ஞா	துவா-38-36, உத-11-24, வை-4-36, ரா-3-4.	
26	8	23	திங்	திர-37-25, அஸ்-11-15, பிரி-53-6 ரா-2-42.	தீபாவளி
27	9	24	செ	சது-37-28, சித்-12-18, ஆயு-54-3, திவி-26-51.	கேதாரிநோன்பு
28	10	25	புத	●-6-53, சுவா-14-38, சவு-52-33, திவி-29-28.	கிருத்திகாசுத்தம்
29	11	26	வியா	பிர-41-26, விசா-18-12, சோ-51-53, திவி-28-58.	
30	12	27	வெ	துதி-45-10, அனு-22-49, அதி-52-4, ரா-9-16.	
1	13	28	சனி	திரு-49-58, கே-28 21, சுக-52-51, ரா 21-36.	
2	14	29	ஞா	சது-54-48, மூல-34-29, திரு-54-0, ரா-1-42.	ராமா
3	15	30	திங்	பஞ்-60, பூரா-40-53, சூல-55-19, திவி-1-3.	துலாபஞ்சமி

தேவாலய உற்ஸவங்கள்.

20உ சிக்கல் வைத்தீஸ்வரன் கோவில், திருபோரூர், திருச்செந்தூர் உச்சவாரம்பம்.
21உ மாயூரம் உச்சவாரம்பம்.
25உ ஷெ ஊர் விருஷபவாகனம்.
26உ சிக்கல் வைத்தீசுவரன் கோவில், சுவாமிமலை, திருப்போரூர், திருச்செந்தூர், திருப்பரங்குன்றம் உச்சவாரம்பம்.
30உ மாயூரம் கடைமுகஸ்நானம்.

Printer at the Sivakami Vilas Press, No. 2, Thumbu Chetty Street, Madras,
by the Publisher, and Proprietor C. M, Manickavel Mudaliar Mylapore, Madras.